குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 30 | சாதாரண – மாசி – 10—3—71 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே, – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## காண்போம் அவர் திருப்பாதம் : : கண்டறியாதன காண.

ஐம்புலன்களும் மனத்துக்கு மகிழ்ச்சி தருவனவாயினும், அவைகளில் கண்ணுக்குப் புலனாகின்ற காட்சியே முன்னிற்பது. அகப்பொருள் துறைகளிலும் 'காட்சி' என்னும் துறையே முதலாவது என்கின்றனர் இலக்கண ஆசிரியர். காட்சிக்கு உளதாய இச்சிறப்புப் பற்றி, மற்றைய புலன்களும் ஒருவகையில் 'காட்சி' என்று வழங்கப்படுகின்றன. எனவே, காட்சியால் கண்குளிர்ந்தால், உடல் குளிரும்; உளங்குளிரும்.

அதுபற்றி, மக்கள் கண்குளிரக் காணும் காட்சியாக எவ்வெவற்றையோ விரும்புகின்றனர். ஆயினும், திருஞானசம்பந்தர், 'மக்கட் பிறப்பை எடுத்ததே ஒருவகைக் காட்சியைக் காணுதற்காகத்தான்' என்கின்றார். அதனை,

" மண்ணினிற்பிறந் தார்பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல் "

என்று விளக்குகின்றார் சேக்கிழார். அஃதாவது, 'மதிசூடும் அண்ணலாராகிய சிவபெருமானுக்கு எடுக்கப்படும் பல விழாக்களைக் கண்டு களிப்பதே மக்களாக உடம்பெடுத்தன் பயன்' என்கின்றார். இதனை ஞானசம்பந்தர் அரியதோர் அற்புத நிகழ்ச்சியால் உலகர்க்கு உறுதிப்படக் காட்டியருளினர். அவ் அற்புதந்தான் மயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கிய அற்புதம்,

மயிலாப்பூரில் "சிவநேசர்" என்னும் செல்வவணிகர் தாம் அருமையாகப்பெற்று, ஞானசம்பந்தருக்கென்றே வளர்த்து வந்த 'பூம்பாவை' என்னும் மகள் அரவு தீண்டி இறக்க, அவளை அடக்கம் செய்த எலும்பும், சாம்பலும் அடங்கிய குடத்தை ஞானசம்பந்தர் அத் திருத்தலத்திற்கு எழுந்தருளிய பொழுது அவர் திருவடிகளில் வைத்து வணங்குதலும், ஞானசம்பந்தர் சிவநேசரது மனத்துயர் நீங்க அவளை எழுப்பித்தரத் திருவுளங்கொண்டு திருப்பதிகம் அருளிச்செய்கின்றவர், 'ஏ பூம்பாவாய்! மனித உடம்பை எடுத்த நீ, அதன் பயனை அடையாமலே அவ்வுடம்பைவிட்டுப் போகலாமோ' என்ற கருத்தையே பத்துத் திருப்பாடல்களிலும் அமைத்து அருளிச் செய்தார். அவைகள்,

" ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் "

" ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய் "

" ..............................கார்த்திகைநாள்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் "

"ஆதிரைநாள் காணுதே போதியோ பூம்பாவாய்"

"தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய்"

"மாசிக் கடலாட்டுக்.........................
.......................காணுதே போதியோ பூம்பாவாய்"

"...............................பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய்"

என்ருற்போல அமைந்துள்ளன. அவைகளில் "பெருஞ் சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்" என்று அருளிச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. சாந்தி - பரிகாரம். பெருஞ் சாந்தி - பெரிய பரிகாரம். இதுதான் 'குடமுழுக்கு, (கும்பா பிடேகம்) பெருங் குடமுழுக்கு' (மகா கும்பாபிடேகம்) என்றெல்லாம் சொல்லப்படுகின்ற பெருவிழா.

விழாக்கள் எல்லாமே பொதுவாகச் சாந்திதான். ஏனெனில் விழாக்கள் நைமித்திகங்களாகும். நைமித்திகங்கள் திருக்கோயில்களில் அன்ருடம் நிகழும் நித்திய பூசையில் சில குறைகள் நிகழ்வது இயற்கையாதலால், அக்குறைகளால் உண்டாகும் குற்றங்கள் நீங்குதற்பொருட்டு ஒரு சில நாட்களில் சிறப்பாகச் செம்மையான முறையில் செய்யப்படுவனவே நைமித்திகங்கள்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

என்ற திருக்குறளில், "சிறப்பு" எனப்பட்டது, நைமித்திகமாகிய விழாக்களே. அதற்குப் பரிமேலழகர் சிறப்புரை கூறும் பொழுது, "நித்தியத்தின் (நிகழும்) தாழ்வு - குறைகள் - தீரச்செய்வது நைமித்திக மாதலின், அதனை முற்கூறினர்" என்று கூறியுள்ள விளக்கம் காணத்தக்கது.

இவ்வாறு விழாக்கள் யாவும் சாந்தியேயாயினும் அதற்கென்றே செய்யப்படும் பெருவிழா குடமுழுக்கு விழாவே. அது பற்றியே அது, 'பெருஞ்சாந்தி' எனப்பட்டது. இதனுல் இறைவிளக்கம் (கடவுள் சாந்நித்தியம்) நீங்காதிருத்தற்கு

இப்பெருஞ்சாந்திவிழா திருக்கோயில்களில் அவ்வப்பொழுது நிகழ்தலும், அதனை மக்கள் கண்குளிரக் கண்டுகளித்தலும் இன்றியமையாதன ஆகின்றன. இவ்வுண்மையையே, "பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்" என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கு நமக்குத் தெளிவிக்கின்றது.

"சிறப்பொடு பூசனை" என்ற திருக்குறளால் திருவள்ளுவர் காலத்திலே நம் தமிழகத்தில் இத்தகைய விழாக்கள் நடைபெற்றமை விளங்குகின்றதன்றிச் சிலர் கருதுவது போல, நேற்று முந்தைநாள் தொடங்கப்பட்டனவாகத் தோன்றவில்லை.

இப் பெருஞ்சாந்தி விழா, அண்மையில் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாற்றுத் திருக்கோயிற் செம்பொற்சோதிப் பெருமானுக்கு மிகச் சிறப்பாக நடைபெற இருப்பது அன்பர் பலர்க்கும் மகிழ்ச்சி தரத்தக்கதொன்றாகும்.

திருவையாற்றுத் திருத்தலம் பல அரிய சிறப்புக்களையுடையது என்பது அறிஞர் பலரும் நன்கறிந்தது. சைவ ஆசாரிய பரம்பரையின் முதல்வராகிய நந்தி பெருமான் தவம் செய்து திருவருள்பெற்ற தலம் திருவையாற்றுத் தலமே. இதனைத் தென்னாட்டிற்கே ஒரு சிறப்பாகச் சேக்கிழார் குறித்தருளுகின்றார். உபமன்னிய முனிவர் மற்றைய முனிவர்கட்கு 'இந்திய நாட்டில் தென்னாடு தவம்செய்த நாடு' என்பதை, 'மாதவஞ் செய்த தென்றிசை' என்று குறிப்பிட்டபொழுது, மற்றைய முனிவர்கள் 'அதற்குக் காரணம் என்ன' என்று வினவிய வினாவிற்கு விடையாக உபமன்னிய முனிவர், 'சிவபெருமானை நன்முறையில் நித்திய நைமித்திகங்களால் வழிபடுதற்குரிய தலங்கள் தென்னாட்டில் உள்ளன' என்றும், 'அவைகளில் சிவபெருமானை வழிபட்டுப் பெரியோர் பலர் பெரும்பயன் எய்தினர்' என்றும் கூறுகின்றவர்,

"நங்கள் நாதனும் நந்தி தவம்செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனல்மலர்
செங்கையாளர் ஐயாறும் திகழ்வது"

என்று அவர் அருளிச்செய்தார்.

திருக்கயிலைக் காட்சியை நேரே கண்டு களிக்க அரிய தோர் யாத்திரையை மேற்கொண்ட திருநாவுக்கரசருக்குச் சிவபெருமான் அதனை இத்திருத்தலத்திலேதான் காட்டியருளி னன். அப்பொழுது அவர் இறைவியும், இறைவனும் மட்டு மன்று; இங்குள்ள சராசரங்கள் யாவும் சத்தி சிவங்களாகத் தோன்றிய அதிசயக் காட்சியைக் கண்குளிரக் கண்டு.

"கண்டேன் அவர் திருப்பாதம்;
கண்டறியாதன கண்டேன்"

(சராசரங்கள் அனைத்தும் சத்தி சிவங்களாகத் தோன்றிய காட்சியால், யான் ஐயாற்றுப்பெருமானது திருவருளையே எவ்விடத்தும் கண்டேன்; அதனுல் என்றும் கண்டறியாத பேரின்பத்தை அடைந்தேன்) என்று பாடியருளினர். அவ் வாறு நாம் அனைவரும் காணத்தக்க ஒரு வாய்ப்புக் கிட்டு கின்றது. அதுவே ஐயாற்றப்பர் பெருஞ்சாந்தி விழா. அதற்கு நாம் அனைவரும் ஒருங்கு சென்று காண்போம் அவர் திருப் பாதம்; அக்காட்சி நாம் கண்டறியாத இன்பத்தைக்காணும் வாயிலாக அமைவதாக.

---

## சொக்கநாத வெண்பா

எல்லாமும் வல்லசித்தர் என்றக்கால் என்னுடைய
பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ—வல்லாடும்
பொங்கரா வேணிப் புனிதா மதுரைநகர்ச்
சங்கரா சொக்கநா தா. 8

பேசாநு பூதி பிறக்க எனதுளத்தில்
ஆசா பசாசை அகற்றுவாய்—தோருஞ்
சிற்பரா னந்தா திருவால வாயுறையும்
தற்பரா சொக்கநா தா. 9

இறந்தும் பிறந்தும் இளைத்தேன் இனியான்
மறந்தும் பிறவா வரந்தா—சிறந்தபுகழ்
ஞாலவா யாமுடிக்கு நாட்டுசூ ளாமணியாம்
ஆலவாய்ச் சொக்கநா தா. 10

— ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

உ

குருபாதம்

குருவருள்

# தோத்திரமும் சாத்திரமும்

## தலையாயவர் தங் கடன்

ஒவ்வொருவருக்கும் 'கடமை' என்பது இயற்கையாக அமைந்துவிடுகின்றது.

“ ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே ”

என்னும் புறநானூற்றுச் செய்யுளால், ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு கடமையேனும் இயற்கையில் இருத்தல் தெளிவாகின்றது.

'கடமை' என்பதும், 'கடன்' என்பதும் ஒன்றே. அதனால், 'கடமை' என்பது, யாதொரு பயனையும் எதிர்நோக்காமல் இன்றியமையாது செயற்பாலது' என்னும் பொருளையே தரும்.

“ கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு ”

என்கின்றார் திருவள்ளுவர். “ நீரின் றமையா துலகு ” என்றவாறு, 'உலகம் நிலைபெறுதற்கு முதலாவதாகிய நீரைத் தருகின்ற மேகம், எந்தப் பயனை எதிர்பார்த்துத் தருகின்றது? ஒன்றையும் எதிர்பாராமலேதான் தருகின்றது; அதுபோலத் தான், 'கடமை' என்பன யாவும், கைம்மாற்றை எதிர் நோக்குவதில்லை' என்பது மேற்கூறிய திருக்குறளின்

பொருள். எனவே, பயன் கருதாது செய்வதே கடமை. அவ்வாறின்றிப் பயன் கருதிச் செய்வது கூலி வேலையாம்.

மேற்காட்டிய "ஈன்று புறந்தருதல்" என்ற புறப் பாட்டினுள் கூறியவாறு, தாய் மகனைப்பெற்று, நன்கு வளர வளர்த்தலை அவள் அவனிடமிருந்து யாதொரு பயனையும் கருதிச் செய்வதில்லை. அதற்கு மாறாக அவனால் சில துன் பங்கள் விளைவதாகத் தோன்றினும், அவள் தன் கடமை யினின்றும் தவறுவதில்லை. தாய் தான் செய்யவேண்டிய கடமையைக் காலத்தே செய்து விடுவாளாயின், பின்பு முதுமைக் காலத்தே அவளை நன்கு பாதுகாத்தலும், பின் மறுமையில் அவள் நற்கதியை அடைதற்கு வேண்டுவன வற்றைச் செய்தலும், பிறவும் அம்மகனுக்குக் கடமையாகி விடுகின்றன. ஆயினும், அக்கடமைகளை அவன் செய்வான் என்பதை எதிர்பார்த்துத் தாய் தனது கடமையைச் செய்வ தில்லை. அதுபோலவேதான் தந்தை தன் மகனைச் சான் றோனாக்குதல் முதலிய கடமைகளும் பின்பு அதனால் விளையும் பயனை எதிர்பார்ப்பதில்லை.

பயனை எதிர்பார்ப்பின் கடமைகள் நன்கு நடைபெற மாட்டா. கடமைகள் நிகழவில்லையென்றால், உலகில் எது வுமே இல்லையாய்விடும். இதனை விளக்குவது பின்வரும் நாலடிச் செய்யுள்.

பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும், உலகம்
செயற்பால செய்யா விடினும் — கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப
என்னை உலகுய்யு மாறு.

முதலில் காட்டிய திருக்குறள், இங்குக் காட்டிய இந் நாலடி. மற்றும் இவைபோல்வன மழை முதலிய இயற்கை நியதிகளை மக்கள் ஆற்றவேண்டிய கடமைக்கு எடுத்துக் காட்டாகக் கூறுகின்றன. அதனால், சூரியன் உதித்தல் மறைதல், பகல் இரவு, பனி வெயில் முதலிய நிகழ்ச்சிகளும் கடமைக்கு எடுத்துக்காட்டாகத் தக்கனவேயாம். இவ்வாறு இவைகளை எடுத்துக்காட்டுவது, மக்கள் தமது கடமைகளை இவைபோலப் பிறழாது நிற்கச் செய்தல் வேண்டும் என்பதற் காகவேயாம்.

இவ்வகையில் நோக்கும்பொழுது, மேலே காட்டிய புறப் பாட்டின்படி, 'தாய், மகன்' என்பவர்க்கிடையே சில கடமை கள் உள. 'தந்தை, மகன்' என்பவர்க்கிடையே சில கடமை கள் உள்ளன. 'ஆசிரியன், மாணவன்' என்போரிடையும் அவ்வாறே, 'அரசன், குடிகள்' என்பவர்க்கிடையே உள்ள கடமைகள் பல, 'தலைவர், தொண்டர்' என்பவர்க்கிடையேயும் கடமைகள் உண்டு. இவற்றுள்,

"தந்தை மகற்காற்றும் நன்றி, அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

"மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்னும் குறள்களில் தந்தை, மகன் கடமைகளைத் திருவள்ளு வர் கூறினர்.

இவ்விடத்தில் ஒரு சுவையான செய்தி உண்டு. அஃதா வது, 'கடமை' என்பது ஒருவர்க்கொருவர் ஆற்ற வேண்டிய நிலையில் இரண்டு பக்கத்திலும் அமைவாதாகவே இருத்தலை எங்கும் காண்கின்றோம். மேகத்திற்குக்கூட உலகம் ஒன்றும் செய்வதற்கில்லையாயினும், அதனை வாயார வாழ்த்தி, நன்றி பாராட்டவேண்டிய கடமை உண்டு. ஆயினும், இதற்கு விலக்காக, 'அறிவுடையோர் அறிவிலார்' என்னும் இவரி டையே அறிவுடைய சான்றோர்க்கு மட்டுமே அறிவிலாதார் செய்யும் குற்றத்தைப் பொறுக்கும் கடமை உளதாதல் வியக்கத் தக்கதே. பொதுமக்கள்பாலும் அறிவுடையோராகிய மேன் மக்கட்கு இவ்வாறான கடமைகள் உள.

இனி, 'கடவுள் உயிர்கள்' என்பவர்கட்கிடையே உள்ள கடமைகளோ அளவில்லன. ஏனெனில் மேற்கூறிய 'தாய், மகன் - தந்தை, மகன் - ஆசிரியன், மாணவன் - அரசன், குடிகள் - தலைவர். தொண்டர்' - ஆகிய அனைத்துத் தொடர்பு களும் 'கடவுள், உயிர்' என்பவர்கட்கிடையே அமைந்துள் ளன. அதனால் அவர்கட்கிடையே அவ் அனைத்துக் கடமை களும் உண்டாகிவிடுகின்றன. எனினும், அக்கடமை உயிர் கள் கடவுளை அணுகும் முறையைப் பொறுத்தே அமையும். சிலர் இறைவனை ஆண்டானாகவும், தம்மை அடிமைகளாகவும் கொண்டு அவனை அணுகலாம். சிலர் அவனைத் தந்தையாக வும், தம்மை மக்களாகவும் கொண்டு அணுகலாம். மற்றும்

சிலர் அவனை ஆசிரியனாகவும், தம்மை மாணவராகவும் கருதி அடையலாம். இவையெல்லாம் இறைவனை அணுகும் முறைகளாகும். ஆனால், கடவுள் உண்மையை உணர்ந்தோ உணராமலோ அவனை அணுக நினையாதவர்க்கு அவன் அரசனும், அவர் குடிகளும் ஆகின்ற நிலைமையே உளதாகும். இது மாற்ற முடியாத ஒன்று. அஃது எவ்வாறெனில், செங்கோல் அரசன் உள்ள நாட்டில் குடிமக்கள் அவன் இருத்தலை அறியினும், அறியாதொழியினும் அவனது ஆணை அவரவர் செய்திக்குத் தக்க பரிசினையும், தண்டனையையும் தந்தே தீர்வதுபோல்வதாம்.

அரசன் இருத்தலை அறிவதே அவனை அணுகுவதாகாது. அதனால், ஒருநாட்டின் அரசனுக்கும் அதன்கண் உள்ள மக்கட்கும் இடையேயுள்ள தொடர்பு, 'தலைவன், தொண்டர்' என்னும் வகையில் எல்லாரிடையும் அமைவதில்லை. அரசனை அணுகி, அவனது அன்பைப்பெற்று அவன்கீழ்ப் பணிசெய்கின்ற ஒரு சிலரிடைமட்டுமே அத்தொடர்பு அமைவதாகும். மற்றெல்லாரிடத்தும் 'அரசன், குடிகள்' என்னும் அத்தொடர்பு ஒன்றுமே உண்டு. அதனால் அமைச்சர் முதலிய அரசத் தொண்டர்கள் அரசனால் அடையும் சில சிறப்புப் பயன்களை ஏனைக் குடிமக்கள் எதிர்பார்க்க இயலாது. குடிகள் அடையத்தக்க பொதுப் பயனைமட்டுமே அவர்கள் எதிர்பார்க்க முடியும். அதுபோலத்தான் 'இறைவன் உண்டு' என்ற அளவில் அறிந்தவர்கள்கூட, இறைவனால் அவன் அடியார்கள் அடையும் சிறப்புப் பயன்களை அடைதல் இயலாது. அனைத்துயிர்களும் அடையும் பொதுப் பயன்களையே அடைதல் கூடும்.

அரசனிடம் பணிபுரியும் அமைச்சர் முதலியவர்களில் தங்களுக்கு அளிக்கப்பட்ட பணியைப் பயன் கருதாது கடமையாகச் செய்பவரே உண்மைப் பணியாளர். அதனால், அவர்கள் அரசனால் பெரும்பயனைப்பெறுவர், ஆயினும் அப்பயனை நோக்கி அவர்கள் தங்கள் பணியைச் செய்தல் இல்லை.

இனி அரசனிடம் பேரன்பையும், பெருமதிப்பையும் பெற விரும்பி அதன்பொருட்டுத் தங்கள் பணியைச் செய்யும் அமைச்சர் முதலியோர் அத்துணைச் சிறந்த பணியாளராகார். அதுபோலவே இறைவனுக்கு உவப்பான செயல்களைத் தமது

கடமையாகச் செய்பவரே மெய்யடியாராவர். அவ்வாறின்றி ஏதேனும் சில பயனை விரும்பிச் செய்வோர் 'மெய்யடியார்' எனப்படுதல் இல்லை. பணி புரிவோர் தங்கள் கடமையில் தவறாது நிற்பின், அவர்கள் தங்களுக்கு வேண்டும் நன்மையைக் கேட்டுப்பெற வேண்டியதில்லை. அதுபோலத்தான், மெய்யடியார் தங்கட்கு வேண்டும் நன்மை எதனையும் இறைவனை வேண்டிப் பெறுதல் இல்லை. அவர்கட்கு இறைவன் தானே அவற்றைத் தந்தருள்கின்றான். இதனையே நாவுக்கரசர்,

> "தன்கடன் அடியேனையும் தாங்குதல்;
> என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்று அருளிச்செய்தார். எனினும், அவர் சூலைநோய் தாங்கமுடியாத அளவில் இருந்தபொழுது இந்நிலையை அவர் இறைவனுக்குச் சிறிது நினைவூட்டும் முறையில் பாடியருளிய திருப்பாடல் நினைவுகூரத் தக்கது.

> முன்னம் அடியேன் அறியா மையினால்
> முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
> பின்னை அடியேன் உமக்காளும் பட்டேன்;
> சுடுகின்றது சூலை; தவிர்த்தருளீர்
> தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ,
> தலையாயவர்தங் கடன் ஆவதுதான்!
> அன்ன நடையார் அதிகைக் கெடில
> வீரட் டானத்துறை அம்மானே.

'முதலில் அறியாமை காரணமாக உம்மை மறந்தமை பற்றி நீர் சினந்து கொடிய சூலைநோயை ஏவி என்னை முடக்கி ஈர்த்தது ஒக்கும். ஆயினும், அதனால் என் அறியாமை நீங்க, யான் உமக்கு அடியவன் ஆயினபின்பும் அச்சூலைநோயை நீக்காதிருத்தல் என்ன முறை? 'அடியவனுக்கு உளதாகிய துன்பத்தை விரைந்து நீக்குதல் ஆண்டானுக்குக் கடமை' என்பது ஒருபுறம் இருக்க, தம்மைத் தஞ்சம் என்று அடைந்தவரது துன்பத்தை விரைந்து நீக்குதல், அருளாலும், ஆற்றலாலும் அறிவாலும் மேம்பட்ட மேலோரது கடமையன்றோ? என் சூலைநோய் சிறிதன்று; குடரைச் சுட்டெரிப்பது போல மிகவும் கொடிதாய் இராநின்றது. அதனால், இனி ஒரு நொடியும் தாழாது தீர்த்தருளல் வேண்டும்'

என்ற இக்கருத்தமைந்த திருப்பாடல் அது. இதில் தலைவன் தன் அடிமைக்குச் செய்யத்தக்க கடமையை நாவரசர் குறிப்பாகவும், மேன்மக்களாயினரது கடமையை வெளிப்படையாகவும் அருளிச்செய்தமை அறிந்து இன்புறத் தக்கது. இதனுள், "அன்ன நடையார் அதிகைக் கெடில வீரட்டானம்" என்றது ஒரு நயமான பகுதி. அஃதாவது. 'அன்னப் பறவைகள் அழகாக நடைபோடுகின்ற, கெடில நதியால் வளம்பெற்ற வயல்கள் சூழ்ந்த திருவதிகை' என்பது அதன் பொருளாயினும், 'தன்னை அடைந்தாரது வினையைத் தீர்க்கின்ற அன்ன (அந்த) ஒழுக்கத்தினர் வாழ்கின்ற திருவதிகை' என்ற பொருளையும் தந்து, 'உனது தலத்திலுள்ள மக்களே இத் தகையினராக, நீ அவ்வாறில்லாதது என்னை' என்ற நயத்தையும் தோற்றுவித்தது அத்தொடர். இங்கு "வினை" என்றது துன்பத்தை. 'எனது குற்றம் நோக்கிச் சூலைநோயை நீக்கத் தாழ்க்கலாகாது; ஏனெனில், சிறியோர் செய்த குற்றத்தைப் பொறுத்தல் பெரியோர் கடமையன்றோ' என்பதையும் இதனுள் நாவுக்கரசர் குறிக்கின்றார்.

"தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
ஆவா என்றங் கடியார் தங்கட் கருள்செய்வாய்"

என்று ஞானசம்பந்தரும்,

"பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி"

என்று மாணிக்கவாசகரும் அருளுகின்றார்கள்.

இனி, 'தலைவன் கடமையை நினைவூட்டிய அவர், தொண்டன் கடமையை நினைந்தனரா' என்னும் கேள்வி எழாதவாறு அவர் அதனைப் பலவிடத்தும் அருளிச்செய்தார்.

"ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்"

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்"

என்றாற்போல்வன எதிர்காலமும், நிகழ்காலமும் பற்றி அருளிச் செய்தன. இனி,

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்;
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்;
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்;
உன்நாமம் என் நாவில் மறந்தறியேன்"

என்றாற்போல்வன இறந்த காலம் பற்றி அருளிச் செய்தன. 'எனது அறியாமை நீங்கவேண்டி என்னைச் சமண் சமயம் புகுவித்தாயாயினும், யான் அதற்கு முன்பு செய்துவந்த வழிபாடுகளை இப்பொழுது திருவுளத்துக் கொண்டருள வேண்டும்' என்று விண்ணப்பித்த அருமை நோக்கற்பாலது.

இவற்றால், 'ஆற்றல் முதலியவற்றால் தலைவராயினார்க்கும், தம்மை அடைந்தவர்க்கு நலஞ்செய்தலே கடமையாகின்ற தன்றி, அடையாதவர்க்கு நலஞ்செய்தல் வேண்டும் என்னும் கடமை இல்லை' என்பது தெளிவாகின்றது. அதனால், இறைவனும் தன்னை அடைந்த மெய்யடியார்க்கே தனது திருவருளைச் செய்கின்றான்; அடையாதவர்க்குச் செய்கின்றிலன். அதனை அறியாது அவனுக்குத் தொண்டு செய்யாதவரும், 'எமக்கு அவன் அருள்செய்யாதது அவனுக்குக் கோட்டமன்றோ' எனப் பிணங்குவராயின், அவர்க்கு யாது சொல்ல இயலும்!

'சலமிலன் சங்கரன்; சார்ந்தவர்க்கலால்
நலமிலன்; நாடொறும் நல்குவான் நலன்"

என்று நாவுக்கரசர் ஓரிடத்தில் வெளிப்படையாகவே அருளுகின்றார்.

இவ்வாறு தோத்திரங்களில் அமைந்துள்ள உண்மையையே சாத்திரங்கள்,

"சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்ச் – சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முற் செய்வினையும் ஆங்கு"

(சிவஞானபோதம் - சூ. 10.)

'நலமிலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்;
சலமிலன்; பேர் சங்கரன்" ( திருவருட்பயன் - 9. )

என்றெல்லாம் சாத்திரங்கள் கூறுகின்றன.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!
கழப்பின் வாராக் கையற வுளவோ!"

என்ற பட்டினத்தடிகள் வாக்கினையும் நினையாமல், உழையாமலே பயன்பெறக் கருதுதல் உணர்வுடையோர் செயலாகாது. இங்ஙனம் தோத்திரங்களின் உண்மையை முற்ற உணர்தற்குச் சாத்திரங்கள் துணையாதலை அறிந்து மக்கள் பயன் பெறுவார்களாக.

# திருவருட்பயன் விளக்க உரை

( மலர் 30, இதழ் 3, பக்கம் 132 இன் தொடர்ச்சி )

நான்காவது குறள்,

“ கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்
திண்டிறலுக் கென்னோ செயல் ”

எனவரும்.

இதன்பொருள் : நாளும் கண்டவற்றை - பலநாளும் நனவில் பழகித் தெளிய உணர்ந்த பொருள்களை ; கனவில் கலங்கியிடும் திண் திறலுக்கு - கனவின்கண் திரியக் கண்டு மயங்குகின்ற திண்ணிய ஆற்றலுடையதாகிய உயிருக்கு ; செயல் என் - தன் செயலாக உள்ளது யாது !

விளக்கவுரை : உயிருக்குத் தன்வயம் (சுதந்திரம்) இன்மை கூறியவாறு.

காண்டல் - தெளிய உணர்தல். கலங்குதல் - திரியக் காண்டல். கலங்குதல் ‘ கனவில் ’ என்றதனுல், ‘ கண்டது நனவில் என்பது போந்தது. அக்கலக்கமாவன, செல்வராய் உள்ளோர் தம்மை வறியராகக் கண்டு துயருறுதலும் வறியராய் உள்ளோர் தம்மைச் செல்வராகக் கண்டு மகிழ்வுறுதலும் போல்வன. “ கலங்கியிடும் ” என்றதில், ‘ இடு ’ துணைவினை. ‘ உயிர்கள் தம்வய முடையனவாயின், இங்ஙனங் கலக்கம் எய்தாவன்றோ ’ என்பதாம். எனவே, ‘ உயிர்கள் தமக்குத் துணையாய பொருளின் வழிப்பட்டு நிற்கும் ’ என்றவாறாயிற்று.

‘ திறல் ’ என்பது, அதனையுடைய பொருளைக் குறித்தது, திறல் இல்லாத உயிரைத் திறல் உடையதாகக் கூறியது புகழ்வதுபோலப் பழித்ததாம். இதனுல், ‘ உயிர் தன்வயமில்லாதது ’ என்பது கனவுநிலையில்வைத் துணர்த்தப்பட்டது.

ஐந்தாவது குறள்,

> "பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
> கறிவென்ற பேர்நன் றற"

எனவரும்.

இதன்பொருள்: பொறி இன்றி - நனவு நிலையிலும் ஐம்பொறிகள் இல்லாமல் ஒன்றையும் அறியமாட்டாத உயிருக்கு, அறிவு என்றபேர் அற நன்று - 'அறிவுடையது' என்று ஆன்றோர் கூறிய பெயர், முற்றிலும் நன்றாயிருக்கின்றது.

விளக்கவுரை: புந்தி - புத்தி. இதுவும் இதனை உடைய உயிரைக் குறித்தது. 'அற நன்று' என்பதும் மேலைக் குறளிற்போலக் குறிப்பான் இகழ்ந்தது. 'உயிர் அறிவுடையதாயினும், அவ்வறிவு, தானே விளங்கமாட்டாது; மற்றொரு பொருள் விளக்க விளங்குவது' என்றவாறு.

இதனால், 'உயிர்கள் தாமே அறிவனவல்ல; அறிவித்தால் அறிவன' என்பது நனவுநிலையில்வைத் துணர்த்தப்பட்டது.

> "அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்"

என்பது சிவஞான போதம் *

ஆறாவது குறள்,

> "ஒளியு மிருளு முலகு மலர்கட்
> டெளிவி லெனிலென் செய"

எனவரும்.

இதன்பொருள்: அலர் கண் தெளிவு இல் எனில் - விழித்துநிற்கின்ற கண்ணிடத்துக் காணுந்தன்மை இல்லையாயின்; ஒளியும் இருளும் உலகும் என் செய - ஒளி முதலிய மூன்றும் அக்கண்ணிற்கு என்ன பயனைச் செய்ய இருக்கின்றன!

---

* சூ. 8. அதி. 2.

**விளக்கவுரை :** ' இருந்தும் யாதொரு பயனையுஞ் செய்யா' என்பதும், ' கண்ணிற்குக் காணுந் தன்மை யிருத்தலானே, ஒளி அதற்கு விளக்கத்தையும், இருள் அதற்கு மறைப்பையும், உலகம் புலப்படுதலையும் செய்கின்றன' என்பதும் கருத்து. ' இருக்கின்றன ' என்பது சொல்லெச்சம்.

' உயிருக்கு அறியுந் தன்மை யில்லையாயின், அதற்கு ஐம் பொறிகள் விளக்கத்தையும், ஆணவம் மறைப்பையும், ஐம் புலன்கள் புலப்படுதலையும் செய்யா' என்னும் பொருளைத் தோற்றுவித்தலின், இக்குறள், ஒட்டணி. ' ஐம்பொறி முதலிய மூன்றும் உயிர் அவ்வப்பயனை அடையக் காண்கின்றோமாத லின், உயிர் அறியுந்தன்மை யுடையதே' என்றவாறு.

இதனால், மேல். " அறிவென்ற பேர் நன்று அற " என்ற தனால், ' அறிவிலது என்று பெயர் கூறலாமோ ' என்றெழும் ஐயத்தை அறுத்து, ' உயிர் அறிவுடையதே ' என்பது உணர்த் தப்பட்டது.

இவ்வாறாகவே, ' பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள் களுள், ' பதி பிறர் அறிவிக்க வேண்டாது, தானே அறிவது ' என்பதும், ' பசு, தானே அறியமாட்டாது, அறிவித்தால் அறிவது ' என்பதும், ' பாசம், தானேயும் அறியாது ; அறிவித் தாலும் அறியாது' என்பதும் போந்தமை காண்க.

எவ்வாற்றாலேனும் அறியுந் தன்மை யுடையது ' சித்து' என்றும், எவ்வாற்றானும் அறியுந் தன்மை இல்லாதது ' அசித்து' அல்லது ' சடம் ' என்றும் சொல்லப்படும்.

' சித்து ' என்னும் பொதுமையால், பதியும், பசுவும் ஓரினம். சித்தன்மையால், பாசம் வேற்றினம். எனினும், பதி பேரறிவுப் பொருள் ; பசு சிற்றறிவுப் பொருள். இவை முறையே ' சூக்கும சித்து, தூல சித்து ' என்று சொல்லப்படும்.

ஏழாவது குறள்.

" சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
யுய்த்தல்சத சத்தா முயிர் "

எனவரும்.

இதன்பொருள் : சத்து அசத்தைச் சாராது - சத்துப் பொருள் அசத்துப் பொருளை, அஃது இழிந்ததாகலின் சாராது; அசத்து அறியாது - அசத்துப் பொருள் அசித்துமாம் (அறிவிலதுமாம்) ஆகலின், அதுவும் சத்துப் பொருளை அறிந்து சாரமாட்டாது. அங்கண் - அந்நிலைமைக்கண்; இவை உய்த்தல் - இவ்விரண்டினிடத்தும் தனது அறிவைச்செலுத்தி நிற்றலால். உயிர் சதசத்தாம் - உயிர் சத்துமாகாது, அசத்துமாகாது இருதன்மையும் உடைத்தாகிய சதசத்தாம்.

விளக்கவுரை : வருவித்துரைத்தன இசையெச்சங்கள். 'சத்தாயின் அசத்தைச் சாராது, அசத்தாயின் அறியாது' என்று ஓதற்பாலதனை இவ்வாறு ஓதினர், சத்து அசத்துக்களது இயல்புணர்த்தவேண்டி. 'உய்த்தலால்' என்னும் மூன்றன் உருபு தொகுத்தலாயிற்று.

சத்து - தோற்றக்கேடுகள் இன்றி என்றும் ஒரு பெற்றித்தாய் நிற்பது. இதனையே 'மெய்ப் பொருள்' என்ப. அசத்து - தோற்றக் கேடுகள் உடையதாய் நிலையாமையுடையது. இதனையே, 'பொய்ப் பொருள்' என்ப. பதி, சத்து. பாசம், அசத்து. எனவே, பதி பாசத்தைச் சார நினையாது. பாசம் பதியை அறிந்து சாரமாட்டாது. சார்தல் அதனில் அழுந்தி அதுவாதல். ஆகவே, 'பசுவே அசத்தாகிய பாசத்தைச் சார்ந்து அசத்தாயும், சத்தாகிய பதியைச் சார்ந்து சத்தாயும் நிற்கும்' என்பதாம். எனவே, சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் இயல்பு என்பது பெறப்பட்டது.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகு மறிவு"

என்ற திருக்குறளாலும் இவ்வியல்பு அறியப்படும்.

மேல், 'பசு சித்துமாகாமல், அசித்துமாகாமல் சிதசத்தாய் நிற்கும்' என்று உணர்த்தியபின், அவ்வாற்றானே, பசு சத்துமாகாமல், அசத்துமாகாமல் சதசத்தாய் நிற்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

(தொடரும்)

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 30. இதழ் 3, பக்கம் 148 இன் தொடர்ச்சி)

167 காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே.

குறிப்புரை :- பழித்தல் - கூட்டைக் கண்டார் இகழ்தல். பாற்றுளி பெய்தல் என்பது, உடலை எரித்துப் பின்னர் பால் தெளித்து எலும்பையும் புண்ணிய தீர்த்தத்தில் சேர்த்தல் என்றபடி. பழிச்சல் - பல்லோர் போற்றுதல். தோற்பை - உடல். தொழிலற ஊட்டும் - வினை முடிவு ஊட்டும். கூத்தன் - உயிருடன் உடனுறைய இறைவன்.

கூத்தன் போன பின்னர் உடம்பு உணர்ச்சியற்றது என்பதாம்.

## 3. செல்வ நிலையாமை

168 அருளும் அரசனும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர்கொளப் போவதன் முன்னந்
தெருளும் உயிரொடுஞ் செல்வனைச் சேரின்
[1]மருளும் பினையவன் [2]மாதவ மன்றே.

குறிப்புரை : ஆனை தேர் முதலியன அரசனது செல்வமாம். இவை அழியும் இயல்பினது என்க. தெருளும் உயிர் - தெளிவுள்ள உணர்வு. செல்வன் - சிவன். சிவன் நிலையானது என்க. மாதவம் மருளும் - பெரிய தவத்தைக் கண்டு வெருவுவான்.

---

பாடபேதம் :- [1] அருளும் பினையவன். [2]மாதவ னன்றே.

உயிருடன் உள்ளபோதே சிவனைச்சேரின் மாதவம் வேண்டாம் என்பதாம்.

169 இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனை
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே.

குறிப்புரை: இயக்குறு - இயங்குகின்ற. துயக்குறு - தளர்ச்சியுறுகின்ற. வானில் இயங்கும் சந்திரன் தேய்ந்து தேய்ந்து இருளாய் இல்லையாவதுபோலச் செல்வமும் குறைந்து குறைந்து இல்லையாய்விடும் என்க. மயக்கறுதலாவது, பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மயக்கம் நீங்குதல். கொண்டல் - மேகம். வானவர் கோனை நாடினால் கருக்கொண்ட மேகம்போலச் செல்வம் வளர்ச்சியுறும் என்க.

இறைவனே நிலையான செல்வம் என்பதாம்.

170 தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே.

குறிப்புரை :- சாயை - நிழல். மாடு - செல்வம். தன்னோடு பொருந்திய நிழல் தனக்கு உதவாதது கண்டும், தனக்கு வேருகவுள்ள செவ்வம் தனக்கு உதவும் என்று எண்ணுகிறார்களே என்று இரங்கியபடி. ஒக்கப் பிறந்தது - உடனாய் வந்தது. உயிர் போகும்பொழுது உடனாய் வந்த உடலும் அழியும் என்க. ஒளி - சிவன். சிவன் கண்ணில் ஒளியாய் விளங்கித் தோன்றுவான் என்க.

உடம்பு அழியுமுன்னர்க் கண்ணில் ஒளியாய சிவனைக் காணவேண்டும் என்பதாம்.

171 ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே.

குறிப்புரை :- தேன் - வண்டு. இரதம் - தேன். வண்டு தேடிக்கொண்டு கொம்பினில் வைத்திடும் என்க. துரந்து — விரட்டி வண்டை விரட்டித் தேனைக் கொணர்வர் என்க. கை விடுதல் - நீங்குதல். செல்வமும் இத்தன்மையாக உடையானைக் காட்டிக் கொடுத்து நீங்கும் என்க.

தேன் வண்டுக்குப் பயன்படாததுபோல் செல்வமும் உடையானுக்குப் பயுன்படாது என்பதாம்.

172 தேற்றித் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் [1] மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.

குறிப்புரை :- தெளிதல் - சிவனே நிலையான பொருள் எனத்தெளிதல். கலக்கி மலக்காதே — கலங்கி மயங்காமல் மாற்றிக் களைதலாவது, கீழான செல்வத்தைப் பெருக்காது மேலான செல்வத்தைப் பெருக்குதலாம். குதித்தலும் ஆம் - கடத்தலும் கூடும்.

சென்றடையாத் திரு வந்து அமையுமாயின் எமபயம் இல்லை என்பதாம்.

173 மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறுகச்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே.

குறிப்புரை :- செல்வம் - முன்னோரால் தேடிவைக்கப் பட்ட பொருள். மாடு - தாமே முயன்று ஈட்டிய பொருள். கலம் - ஓடம். இரண்டுமே நீரின்மேல் ஓடம்போல அழியுந் தன்மையன என்க. அவிழ்கின்ற ஆக்கை - பிரிகின்ற உடம்பு. சிமிழ் - சேமிப்பு, பிரணவம். உடம்பிலுள்ள உயிருக்கு வீடு பேறுகவுள்ளது சிவம் என்க.

செல்வமும் மாடும் வீடுபேறு அடைவதற்கு என்று தெளிய வேண்டும் என்பதாம்.

174 வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு மளவே தெமக்கென்பர் ஒண்பொருள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூடலு மாமே.

---

பாடபேதம் :- [1] மறித்துங்கள்.

குறிப்புரை :- அளவேது - அளவற்றது. மனைவி முதலி யோர் அளவற்றதாயினும் பயனற்றது என்க. ஒண்பொருள்- செம்பொருளாகிய சிவன். மேவுதல் - அடைதல். விரிவு செய்தல் - பழகுதல். கூவுந் துணை - கூவி அழைத்துக் கொள்ளும் துணை. (நாதசம்மியம் கிட்டும் என்றபடி.

நாடொறும் சுழுமுனை மார்க்கமாக நினைந்து பழகுவார்க் குக் கூவியழைத்துக்கொள்ளுந் துணையாவான் என்பதாம்.

175 வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.

குறிப்புரை :- வேட்கை - உலக ஆசை. மெய் - சிவன் தறி - சுழுமுனை. ஒன்பது — ஒன்பது வாயில்கள். ஒன்பது வாயில்கள் வழியே உயிர் போய்விடுமே என்று எண்ணிச் சுழுமுனை மார்க்கமாக உண்மைப் பொருளைக் காணவேண்டும் என்க. மெய்கொள்வார்க்குப் பூட்டுந் தறி ஒன்று, ஏனை யோர்க்கு ஒன்பது வாயில் என்றபடி. தமர் - சுற்றத்தார். உயிர்போம்பொழுது இவர் காட்டிக்கொடுப்பர் என்க,

சுற்றத்தாரைக் காட்டிலும் கைதூக்கி விடுவது மெய்ப் பொருளே என்பதாம்.

176 உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சொன்றிலை அண்ணலை எண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்நமன் தூதர்
சுடும்பரி சத்தையுஞ் சூழகில் லாரே.

குறிப்புரை : அடும்பரிசு - வெல்லும் வகை. எண்ணும் நினையும். உடம்பொடு உயிர்பிரியும் வெற்றியைத் தரும் அண்ணலை நினையும் என்க. விடும் பரிசு - உயிரை வேறு படுத்தும் பரிசு. சுடும் பரிசு - வேதனைப் படுத்தும் பரிசு சூழகில்லார் - கருதமாட்டார்.

பிராரத்தவினை நுகர்வு முடிந்த பின்னர் நமன் தூதர் உயிர்படும் வேதனையையும் பாராது அழைத்துச் செல்வர் என்பதாம் (தொடரும்)

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்,

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

(மலர் 30, இதழ் 3, பக்கம் 152 இன் தொடர்ச்சி)

காமிகத்தில்,

**यावन्न तत्समो जात स्तावन्नाराधने क्षमः ।**

— कामिकम्

சுளுகோதகதானம் என்பது பூஜைக்கு முக்கியமாகும்.

किंचित्पत्रं समादाय चुलुकं जलमेव च ।
योदत्ते दत्तमात्रेण तस्मिन्दत्तं जगत्त्रयम् ॥
एकं च पुष्पं सलिलं च किञ्चित् अमंत्रकंवापि समंत्रकं च ।
समर्पयेच्छंकरमूर्ध्नि योवा त्रिवंशकोटीः शिवलोकमेति ॥

கொஞ்சம் பத்திரத்துடன் ஜலத்தை எடுத்துக்கொண்டு எவன் சுளுகோதக சமர்ப்பணம் செய்கிருனே அவனுக்கு மூன்று உலகமும் அளிக்கப்பட்டது.

கொஞ்சம் ஜலம் சிறிது புஷ்பம் இவைகளை மந்திரம் கூறியோ கூருமலோ எவன், சிவனுடைய சிரசில் சமர்ப்பணம் செய்கிருனே அவனை குலகோடிகள் சிவலோகமடையச் செய்கிருர்.

பூஜையின் முடிவில் சிவாசாரியனுடைய கையினுல் விபூதி பெறவேண்டும். அவ்வாசாரியனும், பெருவிரல் அணிவிரலுடன் நடுவிரல் சேர்த்து விபூதி கொடுக்கவேண்டும். இது ஸர்வதோஷநிவாரகம்.

பெருவிரலுடன் ஆள்காட்டிவிரல் சேர்த்தால் தனநாசம் உண்டாகும். பெருவிரலுடன் நடுவிரலை மாத்திரம் சேர்த்து விபூதியளித்தால் மரணமுண்டாம். — வசனரத்னவளி.

ஆசாரியனுடைய வலதுகைப் பெருவிரலில் அக்னியும், சுட்டுவிரலில் வாயுவும், நடுவிரலில் நக்ஷத்திரங்களும் அணி விரலில் சூரியனும் சிறு விரலில் இந்திரனும் உள்ளார்கள்.

भस्मप्रदानकालेतु अग्निमंत्र मनुस्मरेत् ।
अग्निरूपस्तदाऽऽचार्यः स्पर्शदोषो नविद्यते ॥

— वचनरत्नावळि

விபூதியளிக்கும்போது ஆசாரியன் அக்னி மந்திரத்தை ஜபம் செய்துகொண்டு கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுக்கையில் ஆசாரியன் அக்னி ஸ்ரூபனுக இருக்கையால் ஸ்பர்சதோஷம் கிடையாது — வசனரத்னுவளி.

இவ்வாறு மூலலிங்க பூஜையை முடித்து பரிவார பூஜையைச் செய்யவேண்டும்.

பூஜைக்குப் பக்குவம் செய்யப்பட்ட அன்னத்தை எட்டுப் பாகம் செய்து அதில் இருபாகம் சிவனுக்கும் ஒருபாகம் தேவிக்கும் ஒருபாகம் கணேசனுக்கும், சுப்பிரமண்யருக்கு ஒருபாகமும் பலி அக்னிகாரியம் இதன்பொருட்டு ஒருபாகமும் ஆசாரியனின் பொருட்டு ஒருபாகமும் மீதியாயுள்ள ஒருபாகம் பரிசாரகர் முதலியவர்களுடைய போஜனத்திற்காகவும் பிரித்து அதன்படி உபயோகம் செய்யவேண்டும். — சஹஸ்ராகமம்.

அர்த்தயாமம் :

अर्धयामं प्रकुर्वीत स्नपनं पञ्चगव्यकम् ।
पञ्चामृतं प्रकल्प्याऽथ द्वारपूजां नकारयेत् ॥
चलासनं समभ्यर्च्य स्नान नैवेद्यकर्म च ।
धूपदीपादिकं दत्वा गौर्यै चैव निवेदयेत् ॥
पादुकाराधनं पश्चात् क्षेत्रपालं समर्चयेत् ।

— कारणागमम्

ஸ்னபனம் பஞ்சகவ்யபூஜையுடன் மூலலிங்கத்திற்கு சலாஸனபூஜைசெய்து, த்வாரபூஜை நீக்கி அபிஷேகம் நிவேதனம் செய்து தூபதீபாதி உபசாரம் செய்து கௌரீபூஜையுடன் பாதுகாராதனம் செய்து க்ஷேத்ரபால பூஜை செய்ய வேண்டும். — காரணாகமம்.

சலாசனம் என்பது ஷடுத்தாஸன பூஜையாகும். ஷடுத்தாஸனம் என்பது அநந்த, தர்ம, ஞான, வைராக்ய, ஐச்வர்யம், பத்ரம் என்ற ஆறுமாம்.

பஞ்சகவ்யம் என்பது, பசுவின்பால், தயிர், நெய், கோஜலம், கோமயம் என்ற ஐந்துமாம்.

பஞ்சாமிருதம் என்பது ரஸபஞ்சாமிருதம் பலபஞ்சாமிருதம் என இரண்டு விதம்.

ஏலக்காய் முதலிய வாசனை நீருடன் பால், தயிர், நெய், சக்கரை, தேன் இவைகள் ரஸபஞ்சாமிருதம். இவைகளுடன் வாழைப்பழம் பலாப்பழம், மாம்பழம் சேர்க்கப்படுமாயின் பல பஞ்சாமிருதமாம்.

अर्धरात्रौतु पूजायाः मर्धयाम मितीर्यते ।
यामं यामार्धकालं वा पूजयेदर्धं यामके ॥
स्नानयुक्तमयुक्तं वा द्वारपूजां विनाऽचरेत् ।
तुलादि मीनपर्यंतं नाचरेदभिषेककम् ॥
विसर्जयित्वा निर्माल्यं गन्धपुष्पादिभिर्यजेत् ।
शुद्धवस्त्रं धरित्वातु गन्धचन्द्रादिलेपनम् ॥
मेषादि कन्या पर्यंत मभिषेकं समाचरेत् ।
मधुशर्करं दुग्धं च नालिकेरोदकं तथा ॥
हिमांबु शशिसिश्रेण गन्धतोयैश्चसेचयेत् ।
पूजयेदष्टपुष्पान्तम् — उपभेद कारणागमम्

அர்த்தயாம பூஜையானது சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு ஏழரை நாழிகைக்குமேல் மூன்றேமுக்கால் நாழிகை அளவில் துவாரபூஜையின்றி சுவாமி அம்பாள் சயனாலய மூர்த்திகள் சண்டேசுரர், பைரவர்களுக்குப் பூஜைசெய்யவேண்டும்.

ஐப்பசிமாஸம்முதல் பங்குனிமாதம் முடிய அர்த்தயாமத்தில் அபிஷேகம் செய்யவேண்டியது இல்லை. நிர்மால்ய விஸர்ஜனம் செய்துவிட்டு நல்ல சுத்தமான வஸ்திரம் சாத்தி வாசனையுடன் பச்சைக்கற்பூரம் முதலியன சேர்ந்த சந்தனம் பூசி அஷ்டபுஷ்பம் வரையில் பூஜைசெய்ய வேண்டும். சித்திரை மாதம் முதல் புரட்டாசி மாதம் வரையில், தேன், சர்க்கரை, பால், இளநீர், பன்னீர், பச்சைகற்பூரம் கலந்த சந்தனம் அபிஷேகம் செய்து முன்போல் தூபதீபம் நைவேத்யம் செய்து அஷ்டபுஷ்ப சமர்ப்பணம் வரையில் பூஜிக்கவேண்டும்.

शर्करा मधु गोक्षीर नाळिकेरं तु चन्दनम् ।
अर्धयामाभिषेकार्हमन्यद्द्रव्यं न कारयेत् ॥

— वचनरत्नावल्याम्

சர்க்கரை, தேன், பசுவின்பால், இளநீர், சந்தனம், இவை அர்த்தயாமத்தில் அபிஷேகஞ்செய்யத் தகுந்தவை மற்றவை கூடாது. எண்ணையும் அபிஷேகம் செய்யவேண்டியதில்லை.

இவ்வாறு மூலலிங்கபூஜை செய்து தேவீ பூஜையும் செய்து பாதுகாராதனம் சண்டபூஜை க்ஷேத்திரபால பூஜை செய்து க்ஷேத்ரபாலருடைய சன்னதியில் முத்ராகண்டம் வைத்து பிரார்த்தித்து அர்த்தயாம பூஜையை முடிக்கவும்.

பஞ்சபர்வா :

பஞ்சபர்வாவென்பது

चतुर्दश्यष्टमी पक्षद्वये दर्शश्च पूर्णिमा ।
सङ्क्रान्तिश्चेति पर्वाणि पञ्च प्राहुर्महर्षयः ॥

— कालादर्शः

சதுர்த்தசி, அஷ்டமி, பௌர்ணமி, அமை, சங்கராந்தி, இவைகள் பஞ்சபர்வாவாகும்.

( தொடரும் )

# யமன்

வேதாந்த சிரோமணி,

**பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்**

( மலர் 30. இதழ் 3. பக்கம் 136 இன் தொடர்ச்சி )

சூரியனுடைய உஷ்ணம் பொறுக்கமுடியாத ஸம்ஞாதேவி சாயாதேவியை வைத்து தந்தையின் வீட்டிற்குச் சென்ருள். சாயாதேவிக்கு சனி, விஷ்டி தப்தி முதலிய குழந்தைகள் உண்டாயினர். ஸம்ஜ்ஞையின் குழந்தைகளான மனு, யமன், யமீ இவர்களிடம் அன்புகுறைந்தவளாகவும், தன் குழந்தையாகிய சனி முதலியவர்களிடம் அன்பு மிக்கவளாகவும் சாயாதேவி நடந்துகொண்டாள். அது பொறுக்காத யமன் காலைத் தூக்கிக்காட்டி சாயாதேவியை மிரட்டினுன். சாயாதேவி கால் புழுக்கும்படி சபித்தாள். 'தாயின் சாபத்தை நீக்கமுடியாது' என்று கூறி சூரியன் யமனுக்கு ஒரு ஒணுனைக் கொடுத்தான். அந்த ஓணுன் யமன் காலில் உண்டாகும் புழு சீழ் முதலியவற்றை உண்டுவிடுவதாகவும் அதனுல் யமனுடைய கால் ஒன்று நொண்டி என்றும் மத்ஸ்யபுராணம் கூறும்.

யமனுடைய மாமனுர் பெயர் வீரவர்மா. மனைவியின் பெயர் நீலா என்று இருக்கலாம். யமாஷ்டோத்தரத்தில் நீலா மனோஹராய நம: என்று வருவதும், வீரவர்மஸுதா பர்த்ரே நம: என்று வருவதும் கவனிக்கத்தக்கன.

குந்திதேவி கன்னிகையாக இருந்தபொழுது துர்வாச முனிவருக்குப் பணிவிடை செய்து சந்தோஷமடைந்த முனிவரிடமிருந்து மந்திரங்களை உபதேசம் பெற்ருள். திருமணம் ஆனபிறகு பாண்டு மகாராஜாவுடன் காட்டில் இருந்தபொழுது முனிவர் உபதேசித்த மந்திரங்களுள் ஒன்ருன யம மந்திரத்தால் யமனை ஆராதித்து அவனுடைய அருளால் தர்மபுத்திரனைப் பெற்ருள்.

மாண்டவ்யர் என்ற முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டு இருந்தார். அரண்மனையில் திருடிய பொருள்களை காவலாளிகளால் விரட்டிக்கொண்டு தொடர்ந்து வரப்பட்ட திருடர் இம்முனிவரின் ஆச்ரமத்தில் போட்டுவிட்டுக் காட்டில் மறைந்தனர். காவலாளிகள் முனிவரைத் திருடன் என நினைத்து அரசனிடம் இழுத்துச்சென்றனர். அரசனும் உண்மையையுணராமல் முனிவரைக் கழுவில் ஏற்ற உத்தர விட்டான். கழுவிலேற்றியும் உயிருடன் தபத்தில் இருந்த இவரை முனிவர் என அறிந்து அவரை கழுவினின்றும் எடுக்கமுடியாமல் அம்மரத்தை அறுத்து முனிவரை மீட்டான். கழுமரத்தின் நுனி இவருடைய பின்புறம் நீண்டு இருந்தமை யால் இவருக்கு ஆணிமாண்டவ்யர் என்ற பெயர் உண்டா யிற்று. ஆணி மாண்டவ்யர் யமனிடம் சென்று "ஒருவிதக் குற்றமும் செய்யாத என்னை ஏன் இவ்விதம் தண்டித்தினாய்? என்று வினவினர். நீர் சிறுவனாக இருந்தபொழுது பூச்சி களின் பின்புறத்தில் குச்சியைக் குத்தித் துன்புறுத்தினீர். அதற்காக இந்தத் தண்டனை உமக்கு அளிக்கப்பட்டது என்று யமன் சொன்னான். நான் அறிவு அடையாத சிறுவயதில் செய்த பாபம் என்னுடைய பெற்றோரைச் சேரும். என்னை அடையாது. இந்த நீதியை அறியாமல் தண்டித்தாய். ஆதலின் நீ மனிதப்பிறவி யெடுப்பாயாக எனச் சபித்தார். அச் சாபத் தின் பயனாக விசித்ரவீர்யன் மனைவி அம்பிகையின் சேடியி னிடத்தில் வியாஸமுனிவரால் விதுரன் யமனுடைய அம்சத் தால் பிறந்தான் என்றும் பாரதம் கூறும்.

பரமசிவ பக்தனாகிய மார்க்கண்டேயரின் உயிரைக் கவரச் சென்ற யமன் சிவபெருமானால் காலால் உதைத்துக் கொல்லப் பட்டான் என்பது திருக்கடவூர் ஸ்தலபுராணம். பிறகு தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கி மீளவும் அவனை சிவபெருமான் எழுப்பிவிட்டார். இந்த ஊர் எழுப்பிவிட்டான் சேரி எனப்படும். தற்சமயம் எருக்கட்டாஞ்சேரி என்று வழங்குகிறது. பிறகு ஈசனின் அருளைப்பெற மாயூரத்திற்குக் கிழக்கே உள்ள அகஸ்த்யமுனிவரின் ஆச்ரமமான வில்வா ரண்யத்தில் சிவபெருமானைப் பூசித்தான். அதன் காரண மாகவே அகஸ்த்யரின் ஆச்ரமமாய் இருந்த வில்வாரண்யம் தர்மபுரம் என்று தற்காலம் சொல்லப்படுகிறது. கையில் புஷ்பத்துடன் இங்கு தர்மராஜன் காக்ஷி கொடுக்கிறார்.

காரைக்காலுக்கு அண்மையிலுள்ள தர்மபுரத்திலும் இம்மாதிரி யான வரலாறு சொல்லப்படுகிறது.

முக்தியளிக்கும் க்ஷேத்திரங்களில் ஒன்ருன ஸ்ரீவாஞ்சி யத்தில் யமசன்னதியுள்ளது. பிராணிகளை ஹிம்சை செய் வதால் உண்டாகும் பாபம் நீங்க இங்கு யமன் தபம் செய்தான்.

தன் பெயரால் ஒருதீர்த்தத்தையும் உண்டாக்கினுன். யமனை அதிதேவதையாகக்கொண்ட பரணி நக்ஷத்திர நாளில் பரமேச் வரன் யமனுக்குக் காக்ஷி கொடுத்தார். ஆதலால் பிரதி வருஷம் கார்த்திகைமாதம் பரணிநக்ஷத்திரம் கூடிய நாளில் யமதீர்த் தத்தில் ஸ்நானம் செய்வது ஸகல பாபங்களேயும் போக்கும். யமனுடைய வேண்டுகோளின்படி இங்கு ஈசன் யமனை வாஹனமாக ஏற்றுக்கொண்டார். அவனுடைய தவத்திற்கு இரங்கி அவனுக்கு காணுபத்ய பதவியும் அளித்தார். ஸ்ரீவாஞ்சி யத்தில் யமனை க்ஷேத்ரபாலனுகவும் செய்தார் என்று அவ்வூர் ஸ்தலபுராணம் கூறுகிறது.

கும்பகோணம் மகாமகக் குளத்தில் பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் தெற்குப்பக்கம் நடுவில் யமதீர்த்தம் இருக்கிறது.

பிரகஸ்பதியின் சகோதரர் ஸம்வர்தர் என்பவர் மருத்தன் என்ற அரசனுக்கு வேள்வி செய்துவைத்தார். அந்த சமயம் ராவணன் மருத்தனுடன் போரிடவந்தான். ஹவிர்பாகத்தைப் பெற்றுக்கொள்ள அங்கு வந்திருந்த இந்திரன், யமன், வருணன் முதலிய தேவர் இராவணனேக்கண்டு மிகவும்பயந்து மயில், காகம், ஹம்ஸம் முதலிய பறவைகளின் உருவத்தில் மறைந்தனர். தீக்ஷையில் இருப்பவன் போரிடலாகாது என்று குருவான ஸம்வர்த்தரால் உணர்த்தப்பட்ட மருத்தன் யாகத்தி லேயே ஈடுபட்டிருந்தான். இராவணன் வெற்றிபெற்றதாகக் கூறிக்கொண்டு சென்றுவிட்டான். அப்பொழுது காகத்தின் உருவத்தில் மறைந்திருந்த யமன் சந்தோஷமடைந்து காகங் களுக்கு வரம்கொடுத்தான்.

यथान्यैर्विविधै रोगैः पीड्यन्ते प्राणिनो मया ।
ते न ते प्रभविष्यन्ति मयि प्रीते न संशयः ॥ 26

मृत्युतस्ते भयं नास्ति वरान्मम विहङ्गम ।
यावत्त्वां न वधिष्यन्ति नरास्तावद्भविष्यसि ॥ 27
एते मद्विषयस्था वै मानवाः क्षुद्भयार्दिताः ।
त्वयि भुक्ते तु तृप्तास्ते भविष्यन्ति सबान्धवाः ॥ 28

எப்படி மற்றப் பிராணிகள் பலவித நோய்களால் என்னால் துன்புறுத்தப்படுகின்றனவோ அவ்விதம் அந்நோய்கள் உன்னிடம் அணுகமாட்டா. ஏ பறவையே நான் சந்தோஷமடைந்தேன். உனக்கு சந்தேகம் வேண்டாம். மிருத்யுவிடம் உனக்கு பயம் வேண்டாம். மனிதர்கள் உன்னைப் பிடித்துக் கொல்லுகிறவரையில் நீ இருப்பாய். என்னுடைய தேசத்தில் பசியினால் வாடியிருக்கும் மக்கள், நீ உண்பதால் திருப்தி அடைவார்கள். அவர்களுடைய பந்துக்களும் திருப்தியடைவர் என்று வரம் கொடுத்ததாக இராமாயணம் உத்தரகாண்டம் பதினெட்டாவது சர்க்கம் கூறுகிறது. இவ் விஷயம் யமனுடைய அஷ்டோத்தர சதநாமாவில் காகஜாதி வரப்ரதாய நம: காகரூபதராய நம: என்ற நாமங்களால் உணரப்படுகிறது.

காசிகாண்டம் 78ஆவது அத்தியாயத்தில் கார்த்திகை சுக்லாஷ்டமியில் உணவும் உறக்கமுமின்றி யமனைப் பூசிப்போர் பிறவிக்கடலைத் தாண்டுவார் என்று கூறப்படுகிறது. விரத சூடாமணியில் யமத்விதீயை, ப்ராத்ருத்வீதியை என்று இரண்டு விரதங்கள் சொல்லப்படுகின்றன. கிருத்திகா சுத்த த்விதீயையில் செய்யப்படும் இவ்விரதத்தில் சகோதரன் சகோதரியை கௌரவித்தலும், சகோதரி சகோதரனை கௌரவித்திலும் முக்யமாகும். சகோதரன் சகோதரிகளுக்கு தன் சக்திக்கு ஏற்றவாறு ஆடை ஆபரணங்களை அளித்து அவள் கையால் அன்று உணவுகொள்ளவேண்டும் என்று கூறப்படுகிறது. மேலும் நரகசதுர்தசியில் (தீபாவளி) உஷக் காலத்தில் தைலத்தில் லக்ஷ்மியை தியானித்து வென்னீரில் நீராடி யமதர்ப்பணம் செய்யவேண்டும்.

( தொடரும் )

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 30, இதழ் 3, பக்கம் 144இன் தொடர்ச்சி )

### சுந்தரமூர்த்தி நாயனுர் துதி

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

பரவு தானையொடு வாரி நீந்தவெழு பகறவஞ் செய்தன
லுமிழுமோர்
சரமு கைத்துநெடு மலைக ளுய்த்தபொரு தவரி
ராமனுள நாணவே
விரவு தொண்டரொடு நீந்த வாரிபுடை விலக
வோர்பதிக மோதுசுந்
தரர்ப தந்தொழுதை யாற்ற ரன்றுதிகள் சாற்றியின்
படைகு வாமரோ.

(இ-ள்) பரவு தானை ஒடு – பரந்த சேனைகளோடு, வாரி நீந்த - கடலினைக்கடந்து செல்ல, எழுபகல் தவம்செய்து - ஏழுநாட்கள் தவம்புரிந்து, அனல் உமிழும் ஓர்சரம் உகைத்து - பெருப்பினைக் காலும் ஆக்கினே யாத்திரம் ஆகிய ஒரு பாணத்தினை விடுத்து, நெடுமலைகள்-(அதன்பின்னர்) பெரிய நீண்ட மலைகளை, உய்த்த - சேதுகட்டுவான் வேண்டிச் செலுத்தின, பொருதவம் இராமன் உளம் நாண - போர்த் தொழிற்குரித்தாகிய வில்லினையுடைய சீராமபிரான் தன்னுடைய உள்ளமானது வெட்குறுமாறு, விரவுதொண்டர் ஒடு- பரந்தஅடியார் கூட்டங்களோடு, நீந்த-காவிரியாற்றின் பெரு வெள்ளத்தினைக் கடந்துசெல்ல, வாரிபுடை விலக - அக் காவிரியாற்றின் பெரு வெள்ளமானது கடுக பக்கத்திலே நீங்க, ஓர் பதிகம் - ஒப்பற்ற "பரவும் பரிசு, என்ற பாசுரத்

தினை, ஓது - திருவாய்மலர்ந்தருளிய, சுந்தரர் பதம் தொழுது- சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கி, ஐயாறு அரன் துதிகள் சாற்றி - ஐயாற்றீச்சுரன்மீது தோத்திரப் பாவாகிய நூலினைக் கூறி, இன்பு அடைவாம் - பேரின்பத் தினைப் பெறுவோம். அரோ - அசைநிலை, (எ-று.)

(கு-ரை) பரவுதானை - பரவியசேனை. அனைவராலும் போற்றும் ஏற்றமுடைய சேனை. சேதுகட்டிய வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வாரி - கடல். வாரி - காவிரிவெள்ளம். இராமன் - அழகன். சரம் - அம்பு, தொண்டர்-அடியவர்கள் இவர்கள் சுந்தரருடையவும், சேரமான்பெருமான் நாயனு ருடையவும் ஆகிய தொண்டர்கள். நீருக்கதிபதி வருணன். நதிபதி - கடல். கடலுக்குரியவன் - வருணன். சுந்தரர் சொற்பதிகம் பாடத்தொடங்கவும் கரைபுரண்டோடிய காவிரி வெள்ளம் மேல்பால் கடல்போல் நின்றது. சேரமான் பெரு மாள் நாயனுர் பெருமகிழ்வுற்று அடியார் கூட்டத்துடனும் தான் குருவாக்கொண்ட திருநாவலூரருடனும் இக்கரைபோந்து ஐயாற்றெம்பெருமானை வணங்கினர். ஓட முதலியவற்றிற் கடங்காமையின் பதிகம் பாடலாயினர். யாம் (எழுவாய்) இன்பு-செயப்படுபொருள் அடைவோம் - பயனிலை.

## மணிவாசகப்பெருமான் துதி

மருமாலை புனையீழ நகராதி பதிகாதன் மகளாகியே
வருமாழை யுடையூமை மறையாதி பொருளோத
மகிழ்வாயருள்
திருவாத புரிநாதன் அடியார்க ளிருதாள்கள் சிரமீதணிந்(து)
உருவாம விதுமோலி துதிபேசி மிகுநேச முறுவாமரோ.

(இ-ள்) மருமாலை புனை ஈழநகர் அதிபதி - நறுமணம் கமழும் மலர்மாலை தரித்த ஈழநாடாகிய இலங்கைநாட்டு அரசன், மகள் ஆகி(ஏ)வரும் - புதல்வியர் ஆகிவரும், மாழை உடை ஊமை - அறிவின்மையோடு கூடிய அம்மகளார். ஊமைத் தன்மை நீங்கி, மறை ஆதி பொருள் ஓத - வேத முதற்பொருளினை ஓதிடுமாறு, மகிழ்வாய் அருள்-மகிழ்வொடு கருணைபுரிந்த, திருவாதபுரிநாதன் - திருவாதபுரியெனும் புண்ணிய நகரில் திருவவதாரம் புரிந்தருளிய மணிவாசகப் பெருமான் (உடைய) - அடியார்கள் - தொண்டர்தம், இரு

தாள்கள், - இருதிருவடிகளையும், சிரம்மீது அணிந்து - நம் தலையின்மீது அணிகலமாகச்சூடி, உருவாமம் விதுமோலி-வடிவுற்ற அழகிய பிறைச்சந்திரனைக் குறுங்கண்ணியாகத்தரித்த சந்திரசேகரப் பெருமான் எனும் பெயருடைய திருவையாற்றுப்பரமன் மீது, துதிபேசி - இவ்வந்தாதியினைப் பாடித் துதித்து, மிகுநேசம் உறுவாம் (அரோ) – பேரன்பினை யடைவோம் ஆக (எறு.)

(கு-ரை.) மரு - மணம். ஈழம் - சிங்களநாடு. (இலங்கை யெனப்பெறும்) மாழை - அறிவு இன்மை. ஆதிபொருள் - ஆதியாகிய பரம்பொருள். ஊமைப்பெண் ஊமை நீங்கித் திருச்சாழல்பாடிய அற்புதச் செயல் குறிப்பிடப்பட்டுள்ளது-மோலி - என்பது விகாரம் முடி என்பது பொருள். நேசம் - அன்பு. வாமம் - அழகு. உரு - வடிவு உறுவாம் - அடைவாம். அரோ - அசைநிலை. யாம் (எழுவாய்) உறுவாம் (பயனிலை) கேசம் (செயப்படுபொருள்)

## சண்டேசுர நாயனர் துதி

(கலிவிருத்தம்)

சிற்பர னருச்சனை சிதைத்த தந்தையின்
பொற்பத மிரண்டையும் துணித்துப் பொற்புடைத்
தற்பர வாழ்வுறு தலைவன் றுள்பணிந்(து)
அற்புத மிகுமையாற் றரனைப் போற்றுவாம்.

(இ-ள்) சிற்பரன் - ஞானவடிவினனாகிய ஆண்டவனுடைய, அருச்சனை சிதைத்ததந்தையின் - பூசையினை ஆகம விதியொடுபட்ட பூசனையன்றெனக்கெடுத்த தந்தையின் பொன்பதம் இரண்டையும், தந்தையாருடைய அழகிய தாள்களிரண்டினையும். துணித்து - அறவே வெட்டி, பொற்பு உடை - அழகுடைத்தாகிய, தற்பர வாழ்வு உறு-இறைவனது மலரடியுறவாகிய முத்தி வாழ்வினையுற்ற, தலைவன் தாள் பணிந்து - சண்டேசுர நாயனருடைய இருதிருவடிகளையும், தாழ்ந்து பணிந்து, அற்புதமிகு - பேரின்ப வாழ்விற்கேதுவாகிய சிவஞானமிகும், ஐயாற்று அரனை - திருவையாறு எனும் பெரும் பதியினைத் திருக்கோயிலாக் கொண்டெழுந்தருளியுள்ள பெருமானை. (அந்தாதியெனும் நூல்கொண்டு) போற்றுவம் - துதிப்பாம். (எ று.)

(கு-ரை.) சிற்பரன் - ஞானசொரூபன், தந்தை - எச்சதத்தன், சிதைத்தமையாவது- தாபரமணலாற்கண்ட சதாசிவத் திருமேனி மீது இவன் கால்பட்டமையாக. இதனாலன்றே இருகால்களையும் தடியத்திருக்குறிப்புண்டாயது போலும். துணித்தல் - இருகூருக்கல். தற்பர வாழ்வு - சிவானந்தப் பெருவாழ்வு. அற்புதம் - சிவஞானம். அரன் - சிவநாமங் களுள் மேலானது. நினைப்பவர்-பாவங்களை பொழித்து சுகங் கொடுப்பவர். சுகம் - பேரின்ப வீடு போற்றுதல் - நூல் பாடித் துதிப்பது. யாம் - எழுவாய். போற்றுவாம் - பயனிலை அரனை - செயப்படுபொருள்.

## திருத்தொண்டர்கள் துதி

மறையா கமத்தினெறி சைவநெறி வழுவாம
நிலவொழுகிளம்
பிறைவேணி நித்தனடி மீதிதயம் வைத்துழுவல்பிரியாது
வலியமுமலக்
கறையாவு மற்றரிய பேறுபெறு மெய்யடியர் கவின்மேவு
கழல்கள்பணியா
நறையா ரிணர்த்துளபமால்விடையிவர்ந்தருளைந்
நதியீசர்துதிபுரிகுவாம்.

(இ-ள்) மறை ஆகமத்தின் நெறி - வேதத்தொடுபட்ட ஆகமத்தின் வழித்தாய் நடக்கும் வைதிக நெறியும், சைவ நெறி - அதனின் மேலதாகிய சைவநெறியும் (விதிமார்க்க மும்) பத்திநெறி - குருஇலிங்க சங்கம பத்திநெறிகளும் ஆகிய இந்நெறிகளில், வழுவாமல் - தவிராமல் (குற்றமில் லாமல்) நிலவு ஒழுகு இளம்பிறைவேணி - நிலவினை வீசும் இளம் சந்திரனைத் தரித்த சடையினையுடைய, நித்தன் அடி, மீது - அழியாத அமலன் அடிமலரிணை மீது. இதயம்வைத்து- மனத்தினைப் பிறிதொன்றினிற் செல்லாமல் பதியவைத்து உழுவல் பிரியாது - எழுமையும் பிரியாது. (விலகாமல்) வலிய மும்மலக்கறை - வன்மையுடைய ஆணவகன்ம மாயையாகிய மூன்றுதளைகளையுடைய கறை (அழுக்கு) யாவும் - அனைத்தும், அற்று - நீங்கி, அரிய பேறு பெறுமெய் அடியார்–பெறற்கரிய பேறுபெற்ற உண்மைநாயன்மார்களுடைய, கவின்மேவு கழல் கள்பணியா - அழகுபொருந்திய வீரக்கழல்களைப் பணிந்து,

நறை ஆர் இணர்துளபமால்விடை-தேன் நிறைந்த கொத்துக்களாகிய துளப மாலையினைத் தரித்த திருமாலாகிய இடபத்தின்மீது. இவர்ந்து அருள் – எழுந்தருள்புரியும், ஐந்நதி ஈசன் - பஞ்சநதீச்சுரன் மீது, துதிபுரிகுவாம் - துதியினைப் பாடுவாம். (எ-று.)

(கு-ரை ) மறை - வேதம். ஆகமம்-முப்பொருள் உணர்த்தும் நான்குபாதங்களை யுடையது. சிவநெறி - சைவநெறி, பிறைவேணி நித்தன் - சந்திரசேகரன். இதயம் (இருதயம் என்பதன் திரிபு. மும்மலம்; ஆணவம் கன்மம் மாயை என்பனவாம். கறை-அழுக்கு. கவின்-அழகு. மெய் அடியார்-மனம் வாக்குக்காயம் ஆயவை தூய்மையுடையவர். பணியா-பணிந்து செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். நறை - தேன் (மணம்). மால்விடையாய்த் தாங்கினன் காண் சாழலோ என்பது திருவாசகம். நறையார் இணர்த்துளபமால் விடை இவர்ந்த என்பது அதனை வலியுறுத்தும் என்றபடி. நித்தன்-அழியாதவன்; என்றுமுள்ளவன். ஐந்நதி ஐயாறு என்பதன் திரிபு

( தொடரும் )

---

## விசேஷ நாட்கள்

### 10—3—71 முதல் 10—4—71 முடிய

| | |
|---|---|
| 13—3—71 | எறிபத்த நாயனார் திருநக்ஷத்திரம் |
| 14—3—71 | காரடையான்நோன்பு ( மாலை 6-40 க்கு ) |
| 24—3—71 | பிரதோஷம் ; தண்டியடிகள் நாயனார் [ திருநக்ஷத்திரம் |
| 27—3—71 | யுகாதிப்பண்டிகை |
| 30—3—71 | வேலூர்க் கிருத்திகை |
| 31—3—71 | நேச நாயனார் திருநக்ஷத்திரம் |
| 2—4—71 | கணநாத நாயனார் திருநக்ஷத்திரம் |
| 4—4—71 | ஸ்ரீராமநவமி ; முனையடுவார் நாயனார் [ திருநக்ஷத்திரம் |
| 8—4—71 | பிரதோஷம் |
| 9—4—71 | பங்குனி உத்திரம் |

# நன்னூலுள் ஒரு நன்னூல்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

**பத்தழகுகள் :**

நூலுக்குரிய பத்தழகுகள் இன்னவென்று கூறப்புகுந்த நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் பின்வருமாறு ஒரு நூற்பாச் செய்துள்ளார்.

" சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல்
நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல்,
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்.
முறையின் வைப்பே, உலக மலையாமை
விழுமியது பயத்தல், விளங்குதாரணத்தது
ஆகுதல் நூலிற் கழகெனும் பத்தே "

**நன்னூலுள் சில அழகுகள் :**

இந்நூற்பாவுட் கூறப்பட்ட பத்தழகுகளுள் சில அழகுகளை ஆங்காங்குத் தம் உரையில் சிவஞான முனிவர் சுட்டிக் காட்டிச் செல்வதுண்டு. எடுத்துக் காட்டாக,

" யரழ முன்னர் மொழிமுதன் மெய் வரும் "

(நன்னூல் 116)

என்னும் நூற்பா உரையில், " சுருங்கச் சொல்லல் " என்னும் வனப்பு வகையான் மொழிமுதன் மெய்யெனக் கூறலின், யகரத்தின் முன் யகரம் மயங்கும் உடனிலை ஈண்டுக் கொள்ளா தொழிக " என்று எழுதுவதைக் குறிப்பிடலாம். " றவ்வொடு கரம் " (நன்னூல் 145) என்பதன் உரையில், " றவ்வொடு கரமும் மீறும் பாந்தமும் இறந்த காலமும் எதிர்காலமும் ஏற்குமெனத் தொகுத்துக் கூறுது, விகற்பத்தின் முடித்தல்

என்னும் உத்தியான் வகுத்துக் கூறினர், புலப்பட வேண்டி யென்க" என்று எழுதியிருப்பது, விளங்கவைத்தல் என்னும் அழகு என்பதனைக் குறிப்பான் உணரலாம்.

**வழக்கிற்கும் அழகு வேண்டுவதே :**

நூலுக்கு வேண்டிய பத்தழகுகளாகிய இவை, வழக் கிற்கும் வேண்டும் என்பது சிவஞான முனிவர் கருத்து ஆகும். 'ஒருவன் வினவியது தம்மிடத்து இல்லையாயின் அதனை இல்லை யென்னலுறின் அவன் வினவியதற்கு இனமாய்த் தம்மிடம் உள்ளதனைக் கூறி, அக்கூற்றானே அதனை இல்லை என்றும், உள்ளதாயின் இத்துணை உண்டு என்றும் கூறுவர் புலவர்; ஏனெனில் வினவுதலும் செப்புதலுமாகிய சொற்கள் சுருங்குதற் பொருட்டு' என்ற பொருள் அமையப் பவணந்தி யார் பாடிய நூற்பா,

"தம்பால் இல்ல தில்லெனின் இனனாய்
உள்ளது கூறி மாற்றியும் உள்ளது
சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே"

என்பதாகும். இதன் உரையில், 'குன்றக் கூறல் முதலிய குற்றங்கள் நீங்கிச் சுருங்கச் சொல்லல் முதலிய அழகோடு வழக்கிற்கும் வேண்டுமென்பார் சொற்சுருங்குதற்கே என்றார்.'' என்று எழுதுவதை நோக்கும்போதே இவ்வுரையாசிரியரின் கருத்து இனிது புலனாகின்றது

சிவஞான முனிவர் பத்தழகுகளை அமைத்து எழுதப் பெறும் நூல்வகையைப் பெரிதும் போற்றும் இயல்புடையவர் என்பது அவருடைய உரைப் போக்கினின்றும் தெளிவா கின்றது.

**'நன்னூலுக்குள் ஒரு நன்னூல்'**

நன்னூல் 462 நூற்பாக்களை உடையது ; இவையனைத்தி னுள்ளும் சிவஞான முனிவருடைய சிந்தையைக் கவர்ந்து நிற்பது ஒரு நூற்பா என்று கூறலாம். எல்லாவற்றிற்கும் முனிவர் உரை விரித்தாரேனும், ஓரிடத்தில் ஒரு நூற்பா விற்கு உரை விரிக்கும்போது, அவரையறியாதே அவருடைய

திறனுயுந் தெளிவு - நடுவுரையாக வெளிப்பட்டிருக்கின்றது; ஆம்; இலக்கண நுட்பங்களை எடுத்துணர்த்தும் நூற்பாக்களில், ஒன்று முனிவருடைய உள்ளம் கவர்ந்தாக ஒளிவீசித் திகழ்கின்றது; அது திகழ்வது எங்கு? சிவஞான முனிவரின் மதிப்பீட்டின்படி, 'நன்னூலுள் ஒரு நன்னூல்' ஆகும். அந்நூற்பா எது?

### பத்தழகும் பொருந்திய அந்நூற்பா:

பதவியலில் 'பகுதி' பற்றிப் பவணந்தியார் பேசி வரும் பொழுது, பகுதி இன்னதென விளக்கிப் பண்புப் பகுதிக்கு எய்திய விதியின் மேற் சிறப்புவிதி ஒன்றும் தந்து, அவ்வாறே தெரிநிலை வினைப்பகுதிக்குச் சிறப்புவிதி ஒன்றுதரும் இடத்துப் பகர்ந்துள்ள நூற்பாவே முனிவர் சிந்தையைக் கவர்ந்துள்ளது:

" நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரிஞ் உண் பொருந் திரும் தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்
றெய்திய விருபான் மூன்ரு மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே"

(நன்னூல் 137)

### சிவஞானமுனிவர் பாராட்டு:

இங்குக் கூறப்பெற்ற இருபத்துமூன்று ஈற்றினை உடைய வாய்பாடுகள் எல்லாம் செய்யென்னும் ஏவலினது பகாப் பதமாகிய பகுதியும், ஏனை வினையினது பகாப்பதமாகிய பகுதியும் ஆம். இதன் பொருள் ஆழம் முதலிய அமைப்பில் ஈடுபட்ட முனிவர், 'கையறியா மாக்கட்கன்றி நூலியற்றும் அறிவினை உடைய மக்கட்குப் பல்கலைக் குரிசில் பவணந்தியென்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான், உலகமலையாமை யுள்ளிட்ட பத்தழகோடும் பிறந்துநின்றது இச் சூத்திரம் என்றுணர்க" என்றெழுதியுள்ளார். பவணந்தி முனிவருடைய பெருமையினை மனமாரப் புகழ்ந்துள்ள சிவஞான முனிவருடைய பெருந்தன்மை இங்குப் பிறங்குகின்றது எனக் கூறலாம். 'பல்கலைக் குரிசில் பவணந்தியென்னும் புலவர் பெருமான்' என்று கூறியதனுன், பல

கலைகளையும் வல்லவராக நன்னூலாசிரியர் இருந்திருத்தல் வேண்டும் என்றும், அவர் புலவர்கட்குள் பெருமகனாக இருக்குந் தகுதிப்பாடுடையவர் என்றும் குறித்தல் தெளிவாகின்றது. அவருடைய நன்னூல் என்ற நல்லிலக்கணப் பனுவலோ நூலியற்றும் அறிவினையுடைய நுண்ணறிவாளர்கட்குப் பயன்படும் என்பதும் இவ்விடத்தாற் புலனாகும் இனிய செய்தியாகும்

## இந்நூற்பாவினுள் பத்தழகு மாட்சி:

இனி, சிவஞான முனிவர் புகழ்ந்துரைத்துள்ள இந்நூற்பாவினுள் விளங்கும் பத்தழகுகளை முறையே நுண்ணிதின் ஆய்ந்து காண்போம். இந்நூற்பாவிற் கூறப்பெற்ற இருபத்து மூன்று தொடக்கத்து வாய்பாடுகள் என்று கூறுவதற்காகவே ஆசிரியர் 'அஃகு ஆம்' என்று கூறலின்றி அஃகு என்று' என்று குறித்துள்ளார்; அன்றியும் 'ஈற்றவும்' என்றும் குறித்துள்ளார். எகரவுயிரானது வினுவிடைச் சொற்கண்ணும் தன் பெயர்க்கண்ணும் அன்றிப் பிறவழி ஈருகாது; ஆதலின் அவ்வெகர வீறு ஒழிந்த ஏனைய ஈறுகள் அனைத்தும் இங்குக் கொள்ளப்படும் என்பதற்காகவே ஆசிரியர் 'ஆம் ஈற்ற' என்று புனைந்துள்ளார். இருபத்து மூன்றீற்றவாக வேறு வேறு விகற்பித்துக் காட்டினுலும், இவையனைத்தும் 'செய்' என்னும் பொதுவாய்பாட்டில் அடங்கும் என்பதற்காகவே 'செய்' என்று கூறியுள்ளார்

சுருங்கச் சொல்லல் என்னும் அழகு இவற்றுல் இந்நூற்பாவில் இனிது அமைதல் கண்டு இன்புறலாம்

"எய்திய இருபான் மூன்ருும் ஈற்றவும்
செய்யெனேவல் வினைப் பகாப்பதமே"

என்றே நூற்பாச் செய்திருக்கலாம்; ஆயினும் 'விளங்க வைத்தல்' என்னும் அழகு தோன்றவே, 'நடவா' என்பது தொடங்கி 'அஃகு' என்று முடிக்கும்வரை ஆசிரியர் கூறியுள்ளார் என்பது வெளிப்படை.

இனி, நட, வா, உண், தின் என்று வரும் முதனிலைகளே விகுதியோடு புணராது நின்று, தனித்து, ஓசை வேறுபாட்டால்

முன்னிலை ஏவல் ஒருமை எதிர்கால வினைமுற்றுப் பொருண்மை உணர்த்தினவோ, ஆய் என்ற விகுதியோடு புணர்ந்து நின்றே அப்பொருண்மை உணர்த்தினவோ என்று ஐயுறு வோர்க்குத் தெளிவுபடுத்துதற்காகவே, 'செய்யென் ஏவல் வினைப் பகாப்பதமே' என்று, 'விளங்கவைத்தல்' என்னும் அழகு தோன்ற ஆசிரியர் கூறியுள்ள அருமைப்பாடும் அறிந்து இன்புறத்தக்கது.

அகரமுதல் இங்குக் கூறப்பெற்ற வாய்பாட்டுச் சொற்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளமையும், அவை அடுக்கி ஒழுங்குற உரைக்கப் பெற்றுள்ளமையும், அவற்றை நிரல்பட ஓதுங்கால் ஓசையின்பம் தோன்ற அமையப் பெற்றுள்ளமையும், 'நவின்றோர்க்கினிமை, 'நன்மொழி புணர்த்தல்', 'ஓசை யுடைமை' என்ற அழகுகள் தோன்ற உள்ளன என்பது இந்நூற்பாவினை ஒருமுறை ஓதினர்க்கும் தோன்றும் உணர் வாகும்.

'செய்யென் ஏவல் வினைப்பகாப்பதம் ஏனைவினைப்பகாப் பதம்' என்று பிரித்துப் பொருள்கொள்ளுமாறு அமைந்தசொற் போக்கும், அன்றிச் செய்யென் ஏவல்வினைப் பகாப்பதமே வினை வினைப் பெயர்கட்கெல்லாம் முதனிலை' என்றும் பொருள் கொள்ளுமாறு அமைந்த சொற்போக்கும் உடைமை, 'ஆழமுடைத்தாதல்' என்னும் அழகமைந்த பகுதி என்று குறிக்கலாம். இவ்விரண்டனுள் பின்னது சிவஞான முனிவ ரால் மறுக்கப்பட்டு, முன்னதே வற்புறுத்தப்பட்டுள்ள பொரு ளாதல் அறிவுடை யுலகம் ஆழ்ந்துணர்ந்தறிந்த அரும் பொருளே ஆகும். இவ்வாறே அகரமுதல் ஒளகார ஈறு வரையும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், முதலிய ஈறுகள் வரையும் கூறப்பட்டுள்ளமை 'முறை வைப்பு' என்ற அழகு அமைந்த பகுதி என்று கூறலாம். அறிவுடையுலகு மலைந்திடாதவாறு சிக்கறுத்துத் தெளிவுறக் கூறப்பட்ட இந்நூற்பாப் பொருள் உலகமலையாமை என்ற அழகுற அமைந்துள்ளது ஏவற்பொருள் உணர்த்துதலும், முன்னிலைத் தனிவினைப் பொருள் உணர்த்துதலும் ஆகிய இருவேறு பொருண்மையை அறிந்து அதற்கியையவே ஆசிரியர் இவ் வாறு உரைத்துள்ளார்; தக்க எடுத்துக்காட்டுக்களாகக் காட்டுதற்கேற்ற உதாரணங்கள் அமைந்துகிடப்ப ஆசிரியர்

நூற்பாச் செய்துள்ளமை 'விளங்கு உதாரணத்தது ஆகுதல்' என்ற அழகினை உடையதாகும்.

தொல்காப்பியர், 'செய்யாய் என்னும் முன்னிலை வினைச் சொல், செய்யென் கிளவி ஆகிடனுடைத்தே' (எச்சவியல் 54) என்று கூறியவாறே 'நடவாய் வாராய்' என ஆயென்னும் விகுதியோடு சேர்ந்த ஏவற்பகுதிகள், அவ்விகுதி குன்றி 'நட, வா' எனவும் நிற்கும் என்ற கருத்தும் இந்நூற்பாவினால் இனிது விளக்கப்பட்டது.

'இருபான் மூன்றும் ஈற்றவும் செய்யென் ஏவற் பகாப் பதம்' என்றும் 'இருபான் மூன்றும் ஈற்றவும் செய்யென் வினைப் பகாப்பதம்' என்றும் தனித்தனியாகப் பயனிலையோடு கூடி முடித்துக்கொள்ளுமாறு இரட்டுற மொழிந்துள்ள ஆசிரியர் பவணந்தியின் நுண்ணறிவு பெரிதும் வியந்து போற்றுதற் குரியதாகும்.

**'தமக்குத்தாமே இலக்கியம்' ஆதல் :**

சிவஞான முனிவரால் இந் நூற்பா, பெரிதும் புகழப் பட்டுள்ளமை புனைந்துரையன்று; மெய்யுரையே என்பது இங்கு எடுத்துக் காட்டப்பெற்றவற்றால் இனிது விளங்கும்;

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்பநுட்பம் சிறந்தன சூத்திரம்"

(நன்னூல் - 18)

என்று தாம் கூறிய சூத்திர இலக்கணத்திற்குத் தம்முடைய வாக்கே தக்க இலக்கியமாக விளங்கும்படி ஆசிரியர் பாடியுள்ள திறம் இனிதுணரத்தக்கது ஆகும். 'நவில் தொறும் நூல் நயம் போல்' எனத் திருவள்ளுவர் நவின்றது அவர்தம் அமிழ்தக் குறளுக்கே பொருந்துமாறு போன்றதே இதுவும் என்று எண்ணி மகிழலாம். நன்னூற்குரைகண்ட சிவஞான முனிவர் உரைப்போக்கில், தம்முடைய உணர்ச்சியைத் தம்மை யறியாமல் வெளிப்படுத்திய வரிகளே 'நன்னூலுள் ஒரு நன்னூற்பாவை' நாம் அறிந்திடத் துணை செய்துள்ளன.

# திருவையாறு மகாகும்பாபிஷேகம்

## *வி. சா. கு.*

திருச்சிற்றம்பலம்

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்றவிப் பத்தரைக் கோதில் செந்
தெளித்துச் சுவைஅமு தூட்டி அமரர்கள் சூழிருப்ப [தேன்
அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்குமை யாறன் அடித்தலமே·

திருச்சிற்றம்பலம்

சோழவள நாட்டில் காவிரியின் வடகரையில் தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்களில் ஒன்றாய், அப்பர் பெருமானுக்குக் கயிலைக் காட்சி காட்டியருளிய இடமாய் விளங்குவது திருவையாறு என்னும் இத்திருத்தலம். சப்தஸ்தான விழா என்னும் சிறந்த திருவிழாவினால் தமிழக மக்களையெல்லாம் கவரும் இத்தலம் தருமையாதீனத்தின் இருபத்தேழு கோயில்களில் ஒன்றாய் இலங்குவது. இவ்வரிய திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் வரும் பங்குனி 17 ஆம் நாள் (31—3 - 71) புதன் கிழமை நிகழ உள்ளது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆகமவிதிப்படி யாகசாலை வழிபாடுகள் வேத சிவாகம திருமுறைப்பாராயணங்கள் ஆகியவற்றுடன் மிகச் சிறப்பாக இம்மகா கும்பாபிஷேகத்தை நடத்தியருளுகிறார்கள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆதீனத் திருக்கோயில்களைக் கண்ணும் கருத்துமாகப் புரந்து வரும் இயல்புள்ளவர்கள். திருக்கோயில்களைப் புத்தம் புதியன வாய்த் திருப்பணிகள் நிறைவேற்றி மகாகும்பாபிஷேகம் செய்வித்து மகிழ்பவர்கள்.

மூன்றாம் குலோத்துங்கசோழ மன்னன் கட்டிய திரிபுவனம் கோயிலை அம்மன்னனே முன்னின்று நடத்தியது

போலத் திருப்பணிகள் செய்வித்து மகாகும்பாபிஷேகம் நடத்தியருளினார்கள். இந்நாட்டு மக்கள் பலருக்கும் குலதெய்வமாக விளங்கும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தை இக்குருமணி அவர்கள் திருப்பணிகள் பலவும் செய்வித்து மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தியதை அனைத்துலகும் அறியும். திருக்கடவூர், சீகாழி, திருக்குவளை திருப்பனந்தாள் முதலிய ஆதீனத் திருக்கோயில்களனைத்தையும் திருப்பணிகள் செய்வித்து சிறந்த முறையில் மகா கும்பாபிஷேகத்தைச் செய்தருளியுள்ளார்கள். இவ்வாறே இத்திருக்கோயிலிலும் மிக்க சிறப்போடு இம்மகாகும்பாபிஷேகத்தை நடத்தியருள்கிறார்கள். பக்தர்களுக்குப் பெருஞ்செல்வம் வழங்கும் ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகத்தைத் தரிசித்து அருள்நலம் பெற ஐயாற்றிறைவன் அன்பர்களை அழைக்கிறான்

## தலப்பெருமைகள் :

திருவையாறு, தென்கயிலாயம், பஞ்சநதம் முதலிய பெயர்களுடன் அண்டத்தில் அட்டமூர்த்தங்களில் ஒன்றான இயமானனாய் பிண்டத்தில் ஆருதாரங்களில்ஒன்றான ஆஞ்ஞையாய் மிளிர்வது. இறைவன் சுயம்பு மூர்த்தி; பிருதிவி அம்சம். புனுகு சட்டம் சார்த்தப்பெறும் தீண்டாத் திருமேனிநாதர். ஐயாறப்பர், செப்பேசர், பிரணதார்த்திஹரர் முதலிய பெயர்களை உடையவர். இறைவன் தானே ஆதிசைவர் வடிவில் தோன்றித் தன்னைத்தானே பூசித்துக் காட்டியது இத்தலத்தின் தனிச்சிறப்பு. பெரிய திருவிழாவில் ஐந்தாம் நாளன்று ஐயாறதனில் சைவனாகியும் என்ற இவ்வரலாற்று நிகழ்ச்சி ஐதீகமாக நிகழ்த்தப்பெறுகிறது. இத்தலத்தில் சிலாத முனிவர் என்பார் நந்தியெம்பெருமானை அரும்பெறல் மகவாய்ப் பெற்றார். இறைவன் நந்திதேவர்க்கு ஐந்து தீர்த்தங்களினால் ஆசார்ய அபிஷேகம் செய்வித்து அவரைக் கணநாதராகச் செய்தமையால் இத்தலம் பஞ்சநதம் எனப் பெயர்பெற்றது.

சுசரிதன் என்னும் அந்தணச் சிறுவன் இத்தலத்தில் பஞ்சாக்கரசெபம் செய்து யமபயம் நீங்கப்பெற்றான். இறைவன் ஆணைப்படி யமனை அழித்து ஆட்கொண்ட துவாரபாலகர் ஆட்கொண்டார் எனச் சிறப்பாக வழிப்படப்படுகிறார். இத்தலத்தில் உள்ள இத்திருமண்டபம் தனிச்சிறப்பு உடை

யது. இம்மண்டபத்தில் அமர்ந்து பஞ்சாக்கர செபம் செய்பவர் விரைவில் ஜெபசித்தி அடைவர். இத்தலத்தில் உள்ள ஹரிகுருசிவயோக தட்சிணுமூர்த்தி தனிச்சிறப்புள்ள மூர்த்தி.

**அப்பர் கயிலைக் காட்சி :**

சிவபெருமான் திருக்கயிலையில் அமர்ந்திருக்கும் திருவோலக்கக் காட்சியை நேரே கண்டு தரிசிக்க விரும்பிக் கயிலை யாத்திரையை மேற்கொண்ட திருநாவுக்கரசரைப் பின்னும் சில ஆண்டுகள் தமிழ்நாட்டில் தெய்வத் தமிழ்ப் பாடல் பாட வேண்டும் என்னும் திருவுள்ளத்தினுல் இறைவன் இமயத்தில் உள்ள ஒரு பொய்கையில் மூழ்குவித்து ஐயாற்றில் கயிலைக் காட்சியைக் காண்க என்று அருளிச்செய்து இத்தலத்தில் சூரியபுஷ்கரிணியினின்றும் எழச்செய்து கயிலைக் காட்சியைக் காட்டியருளினுன். அப்பர் கயிலை கண்ட ஆடி அமாவாசை யன்று இவ்விழா இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**சுந்தரர்க்குக் காவிரி வழிவிட்டது :**

சுந்தரர் சேரமான்பெருமாள் நாயனுருடன் இத்தலத்திற்கு எழுந்தருளியபோது, காவிரிநதி வெள்ளப்பெருக்காய் இருப்பதுகண்டு தென்கரையில் நின்றே "பரவும்பரி சொன்றறியேன்" என்று பதிகம் பாடத்தொடங்கிய சுந்தரருக்கு இறைவன் ஓலம் அருளினன். காவிரி வெள்ளம் தேங்கி நின்று சுந்தரருக்கு வழிவிட்டது. சுந்தரர் ஆற்றைக் கடந்து சென்று ஐயாறப்பனை வழிபட்டு இன்புற்ருர். சுந்தரருக்கு ஓலமருளிய விநாயகர் ஓலவிநாயகர் என இங்கு வழங்கப்படுகிருர்.

ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஐயடிகள் காடவர்கோன், முதலியோர் பாடிய அருட்பாடல்கள் உடைய இத்தலம் தனிச்சிறப்புடைய சிவதலம்.

இராஜ இராஜ சோழ மன்னன் மனைவியாகிய தந்திசக்தி விடங்கி என்னும் ஒலோகமாதேவியும் இராஜேந்திர சோழன் மனைவியாகிய பஞ்சவன்மாதேவியும் வடகயிலாயம், தென் கயிலாயம் ஆகிய கோயில்களைத் திருப்பணி செய்துள்ளனர். பல்லவ நாயக்க மன்னர்கள் காலத்தில் பல திருப்பணிகள் செய்யப்பெற்றுள்ளன.

வடலூர் இராமலிங்க சுவாமிகள், தியாகையர் போன்ற பெரியோர்கள் இத்தலத்திறைவனை வழிபட்டு அருள் நலம் பெற்றுள்ளனர்.

இத் திருக்கோயில் கட்டளை விசாரணையாக இருந்த ஸ்ரீ அழகியசிற்றம்பலத் தம்பிரான் சுவாமிகள் இங்குள்ள பழனி ஆண்டவரை வழிபட்டு பல அருளிப்பாட்டினைப்பெற்ற வர்கள். பருத்திக்குடி கிராம வழக்கில் இப்பெருமானே முன் னின்று வெற்றி பெறுவித்தமையை நினைந்து தாமே காவடி விழாவெடுத்து வழிபட்டார்கள். இவர்கள் நாடோறும் ஐயாற்றிலிருந்தே பழனி முருகனை மானசீகமாக வழிபடும் நியமத்தில் பழநித் திருக்கோயில் கதவுகள் ஒருநாள் தாமே திருக்காப்பிட்டுக் கொள்ள அங்குள்ள அன்பர்கள் திகைத்து நின்றபொழுது, பழனி முருகனே 'ஐயாற்றன்பன் நம்மைப் பூசிக்கின்ருன்' என்று அசரீரியாகச் சொல்லப்பெற்ற பெருமை உடையவர்கள். தருமையாதீனம் 20 ஆவது மகா சந்நிதானம் அவர்கள் இத்திருக்கோயில் முருகனுக்குக் காவடி ஒன்றை அளித்துள்ளார்கள். இரண்டு காவடிகளுடன் கார்த்திகைதோறும் பால்காவடி விழாநிகழ்த்தி இம் முருகப் பெருமான் சிறப்பு வழிபாடுகள் செய்யப்பெறுகின்ருன்.

இவ்வரிய ஆலயத்தைக் கண்ணெனக் காத்துவரும் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் இத் திருக் கோயிலில் இராசகோபுரம் மற்றுமுள்ள கோபுரங்கள் பழுது பார்த்துச் சுதையமைத்தும், வர்ணம் வைத்தும், சுவாமி அம்பாள் விமானம், திருவோலக்க மண்டபம் முதலாகப் பல விமானங்கள் மண்டபங்கள் புதுவர்ணம் தீட்டியும், சுவாமி கோயில் மேல்தளம், திருமதில் பழுதுபார்த்தும், வடகயிலாயம் தென் கயிலாயம் சுதைகள் திருத்தியும், புராண ஐதீகச் சுதைகள் அமைத்தும் மின்விளக்குப் புதுப்பித்தும், பிராகாரங் கள் தளவரிசையிட்டுச் செப்பம் செய்தும், மற்றும் பல வகை யில் ஜீரணோத்தாரணத் திருப்பணி நிறைவேறி நிகழும் சாதாரண ஆண்டு பங்குனித்திங்கள் 17ம் நாள் (31-3-1971) புதன்கிழமை உரோகிணி நக்ஷத்திரம் கூடிய நல்லநாளில் உதயாதி நாழிகை 6-15க்கு மேல் 11-15க்குள் காலை மணி 8-45க்கு மேல் 10-30க்குள், விருஷப லக்னத்தில் ஸ்ரீ தர்மசம் வர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமிக்கும், விநாயகர் முதலிய பரிவாரங்கட்கும் அஷ்டபந்தன மகாகும்பாபி ஷேகம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அன்பர்கள் வந்து தரிசித்து ஸ்ரீ ஐயாறப்பர் திருவருள் பெற்று உய்வார்களாக.

# ஒருமரபு

## ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

தொண்டைமண்டலாதீனம், காஞ்சிபுரம்.

சிவஞானமாபாடியம் எழுதத்தொடங்கும் பொழுது. மாதவச்சிவஞான யோகிகள் 'வாழ்க அந்தணர்' எனமுதலுந் திருப்பாசுரத்தையும் 'நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க' என முதலுஞ் சிவபுராணத்தையும் முன் எழுதிக்கொண்டு (சிவஞானபோதப் பேருரையை) வரைந்தருளினர்கள். அச் சிவபுராணத்தை முழுதும் எழுதும் கருத்தில்லை. காரணம் இது :

சிவபுராணம் குருவணக்கம். "தோடு கூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருள் ஆகும்" என்ற உண்மையை உணர்ந்தார்க்கே அது குருவணக்கமாதல் புலப்படும். 'நமச்சிவாய' என்னும் குருபதேச மந்திரத்தின் தூலநிலையை வாழ்த்தியதும், அடுத்து அம்மந்திரோபதேச குருநாதன்றாளை வாழ்த்தியதும், அக்குருநாதன் தம்முள் நின்று நீங்காதான்; அவனே தம்மைக் கோகழியில் அவ்வுபதேசம் புரிந்து ஆண்ட குருமணி என்று கூறி வாழ்த்தியதும் அறிவாரே அச்சிவபுராணம் குருவணக்கம் என்னும் உண்மையையும் அறிவார். அருள் பெற்றோர் குருவணக்கமே செய்யக்கடவர் என்பதும் சைவமடத்தில் சம்பிரதாயம் அறிந்தோர்க்கே தெரியும்.

சிவஞான முனிவர் காலத்திலே இருந்த திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவர் எத்தனையாவது பட்டமோ அத்தனைக்கு மட்டும் சிவபுராணத்தினை மேற்கொண்டருளினர். அப்பாடியத் தொடக்கத்தில், இருபத்தொன்றாவது பட்டத்தினராய் வீற்றிருந்தருளும் பின் வேலப்ப தேசிகர்க்கு மாணாக்கராய் விளங்கியவர்கள் மாயோகிகள். அக் குருமாமணிக்கு முன்விளங்கிய இருபதின்மர் குருக்களையும் குறிக்கொண்டு

இருபது அடிகளைமட்டும் மேற்கொண்டு, அவர்கள் திருவடிகளை வணங்கிச் சிவஞானபோதப்பொருளை யுரைப்பன் யான் எனக் கருதியதாகக் கூறுவர் அறிந்தோர்.

இன்னோரன்ன பலமரபு (வெவ்வேறு) நூல்களில் உள்ளன. அவற்றையெல்லாம் தாமே உணர்தல் அரிது. குருவருள் தான் அவற்றையுணர்த்தும். குருவருள் இன்றேல் திருவருள் உருது எவர்க்கும் எஞ்ஞான்றும் என்பது ஒருதலை.

தருமையாதீனத்திலே முதலாசிரியர் குருஞானசம்பந்தர் முதலாக எழுந்தருளியவருள், பத்தாமவர் ஆசிரியர் சிவஞான தேசிகர். அவர் மாணுக்கர் பலருள் ஒருவர் சிவாநந்தமுனிவர். அவர் அருளிய 'சம்பிரதாயதீபம்' என்னும் நூலைச் சீகாழிப் புலவர். ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை தருமையாதீன வெளியீடாக 44 ஆண்டிற்கு முன் வரச்செய்தார். 15 ஆண்டிற்குமுன் அடுத்த பதிப்பும் வெளியாயிற்று. இதனை இப்பொழுது அங்கு வீற்றிருந்தருளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளப் பாங்கின்வண்ணம் திருந்தியமுறையில் வெளிவரத் துணையாயினேம். அப்பொழுது 20—12–56இல் உணர்ந்த ஒன்று இப்பொழுது இதில் எழுதலாயிற்று.

'சம்பிரதாயதீபம்' பல பல அரிய உண்மைகளைப் புதிய முறையில் உணர்த்தும் ஞானசாத்திரம். அஃதொன்றைமட்டும் தெளிய உணர்வோர் சிறந்த சைவசித்தாந்த ஞானத்தோர் ஆவார். சைவாசாரம் பல தெரிந்தொழுகும் புண்ணியமும் பெறலாம். சைவமரபு பல தெரிந்துகொள்ளவும் அது பெருந்துணையாயுள்ளது. குருமரபு சம்பிரதாயம் கூறும் ஒன்பது வெண்பாவுள், "தேவர்பிரான் வளர்கயிலைக் காவல்பூண்ட திருநந்தி' குருமுதலாகப் பத்தாமவராய குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர் முடிவாக (த்தம்காலத்துக்கு) முற்பட்ட ஆசிரியர் அனைவரையும் வணங்கினர் சிவாநந்த முனிவர். அவற்றுள் 7, 8, 9, ஆகிய வெண்பா :-

(1) ஞானசம்பந்தன் (2) ஆநந்தபரவசன் (3) பின்
தான் அவன் ஆகின்ற சச்சிதா நந்தன்—(4) ஊனமற்று
ஓர்மாசி லாமணி (5) பின் ஓர்ஞான சம்பந்தன்
(6) சார்திரு ஞானசம்பந் தன்.

(7) எங்கும் சிவம்ஆய் இலகுதிரு வம்பலவன்
(8) தங்கும் அழகியசிற் றம்பலவன் — (9) கங்குல்
பகல்அற்ற காட்சி பதிப்போன் தருமை
அகல்கிலா நாவுக் கரசு.

(10) என்னும் குரவர் இடைவிடா தேஅருள்செய்
மன்னுசித் தாந்த வழக்கருளி—என்னை ஆள்
சீர்ஆர் சிவஞான தேசிகசம் பந்தன்தாள்
ஆர்வமுடன் வைப்பேன் அகத்து.

இக்குருமகா சந்நிதானம் பதின்மரையும் திருவுள்ளத்திற் கொண்டு 'உபதேசவிளக்கம்' என்னுந் தலைப்பில் உள்ள தலைச்செய்யுளில் (99) பத்துமுறை குருவைக் குறித்தார் சிவாநந்த முனிவர், இதுவே அவ்வெண்பா :-

'குருவே உபதேசம் கூறு' (10) என்குருவின்
(9) குருவின் (8) குருவின் (7) குருவின் (6) குருவின்
(5) குருவின் (4) குருவின் (3) குருவின் (2)குருவின்
(1) குருவுபதே சம்சொல்வேன் கொள்.

இதில் உள்ள எண், பத்தும் மேற்குறித்த மூன்று வெண்பாவுளும் திருப்பெயர் கூறிய பதின்மர் ஆசிரியர் இவர் இவர் என்று அறிய இடப்பட்டன.

முதலாசிரியர் அருளிய உபதேசமே பின்வந்த ஆசிரியர் உபதேசித்தருள்வர் ஆதலின் அவ்வுபதேசம் தமதாக் கொள்ளாமல் முதலாசிரியர் உபதேசமாக் கொள்வதே மரபு; அதனை இதிலும் காண்க. இதற்கு முந்திய வெண்பாவிலே, மந்த்ரகலை சொன்னீர் மருவும் உபதேசகலை எந்தையயே சொல்லி எனையாள்வீர்" என்று வேண்டிய மாணாக்கனை 'மைந்தா' என்று விளித்தார். குரு, ஞான பிதாவும் சீடன், ஞானபுத்ரனும் ஆதல் மரபு. 'குருவே உபதேசம் கூறு' என்றது அச்சீடன் வேண்டியதேயாம். அதற்கு விடையே 'கொள்' என்பது முடிய உள்ள பிற எல்லாம். (10) 'என்குரு' என்றது சிவஞான தேசிகரை. (9) குருவின் குரு என்றது திருநாவுக்கரசரை. (8) அக்குருவின் குரு அழகியசிற்றம்பலவர். (7) அக்குருவின்குரு திருவம்பலவர். (6) அக்குருவின் குரு திருஞானசம்பந்தர் (5) அக்குருவின் குரு

(ஓர்) ஞானசம்பந்தர், (4) அக்குருவின் குரு மாசிலாமணி தேசிகர் (3) அக்குருவின் குரு சச்சிதாநந்தர். (2) அக்குருவின் குருவும் ஆநந்தபரவசதேசிகர்க்குக் குருவும் ஆகிய (1) குருஞானசம்பந்தர், இங்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிக்க வேண்டியே "தான் அவன் ஆகின்ற சச்சிதாநந்தன்" என்றார் ஆசிரியர். ஆநந்தபரவச தேசிகர் சத்தியோநிர்வாண முத்தியுற்றதும் உடனே சச்சிதாநந்த தேசிகர்க்கு உபதேசம் புரிந்தருளியதும் அத் திருமடத்து வரலாற்றுண்மை. மகாகவி குமரகுருபர சுவாமிகளுக்குக் குரு (4) மாசிலாமணிதேசிகர் என்பது உலகப்பிரசித்தம்.

இப்படி ஒருமரபு எப்படி இயற்பட்டது? இக் கேள்வி எழலாம். இதற்குத் தக்க விடையுண்டு.

தருமையாதீனத்து வெளியீடாகிய 'மெய்கண்ட சாத்திரம்' இரண்டாவது பதிப்பின் 434 ஆவது பக்கத்தில் உள்ள 'சந்தானசாரிய பரம்பரை' என்னும் அட்டவணையுள், மெய்கண்டதேவர் முதலாகக் காழிக்கங்கை மெய்கண்டார் வரையில் அறுவர் குரவர் ஆவர் என்பது புலப்படும். ஏழாமவர் குரவர் சிற்றம்பலநாடிகள். அவர் அருளியது 'துகளறு போதம்' என்னும் முடிவாய சித்தாந்த ஞானசாத்திரம். அதன் பொருட்சுருக்கமே தருமையாதீனத்து வெளியீடாகிய சிவாநந்தபோதம். அம் முதல்நூல் வெண்பாக்களுள் (99) ஒன்று.

"கருவேலை தன்னைக் கடப்பர் உலகில்
மருவாத இன்பத்துள் வைத்த (1) குருவின்
(2) அடியார் (3) அடியார் (4) அடியார் (5) அடியார்
(6) அடியாரைச் சார்ந்த (7) அவர்." என்பது.

இதில், (1) இன்பத்துள் வைத்தகுரு என்றது மெய்கண்டதேவ நாயனாரை.

(2) அக்குருவின் அடியார் அருணந்திதேவ நாயனார்

(3) அக்குருவின் அடியார் மறைஞானசம்பந்த நாயனார்

(4) அக்குருவின் அடியார் உமாபதிதேவ நாயனார்

(5) அக்குருவின் அடியார் அருணமச்சிவாயர் (சம்பிரதாய தீபச் செய்யுளில் மச்சுச் செட்டியார் எனப் போற்றப் பெற்றவரே) அவர் மாணுக்கர் சித்தர் சிவப்பிரகாசர். அவர் மாணுக்கர் துறைசைத் திருவைந்தெழுத்துத் தேசிகர். தருமையாதீனத்திற்கும் காஞ்சி ஞானப்பிரகாசர் ஆதீனத்திற்கும் குருபரர் ஆகிய காழிக்கங்கை மெய்கண்டாரும் மச்சுச் செட்டியார் (அருணமச்சிவாயர்)க்கு மாணுக்கரே.

(6) அக் குருவின் அடியார் (ஷ) காழிக்கங்கை மெய்கண்டார்.

(7) அக் குருவின் அடியார் சிற்றம்பலநாடிகள், துகளறுபோதம் அருளியவர். எங்கள் ஆதீனத்து ஞானப் பிரகாச தேசிகருக்குக் குரு. மூவலூரில் ஒரே வேளையில் அறுபத்துமூவர்க்குப் பேரின்பமுத்தியருளியவர். உமாபதி தேவநாயனுர் அருளிய குருவணக்கப்பாவில், தம் [சுவ] குரு முடியத் திருப்பெயர் சொல்லி 'எமையாளுந் தன்மையோர்' எனறது தொல்லைமரபு.

அம்மரபுக்கு முந்தியது சிவஞானசித்தியாரில்,

"போதமிகுத்தோர் தொகுத்த பேதைமைக்கே
பொருந்தினேர் இவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
ஏதுநெறிஎனுமவர்கட் கறிய முன்னுள்
இறைவன் அருணந்திதனக் கியம்ப நந்தி
கோதிலருட் சனற்குமாரர்க்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன் கொண்டு
தீதகல எமக்களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே"

என்றது.

இவற்ருல் நாம் அறிந்து கடைப்பிடித்துய்யக் கிடப்பது குருமரபு வணக்கம் பேரின்பம் பெறுவிக்கும் தலைமை யொடுக்கம் என்பதேயாகும். மரபுமட்டும் அன்று கருவேலையைக் கடப்பர் என்றதறிக. பிறப்பிறப்பொழித்துப் பேரின்பந்தருவது குருவழிபாடே,

வாழ்க திருநெறி. வளர்க சைவ மரபு.

# சிந்தியாகமம்

வித்துவான்,

திரு, வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

## பதி இலக்கணம்

இறைவன் மக்கள் அறிவுபெற்றுய்யும் பொருட்டு முதன் முதலாகச் செய்த நூல்கள் வேதமும் சிவாகமங்களுமாம். வேதங்கள் சூத்திரம் போன்றிருத்தலின் அவற்றைப் பொது நூல் என்றும் சிவாகமங்கள் அவற்றின் விரிவுரை போன்றிருத்தலின் அவற்றைச் சிறப்பு நூலென்றும் கூறுவர். வேதம் ஆகமம் என இரண்டாகக் கூறப்படினும் அவற்றின் பொருள் முடிவு ஒன்றே.

" வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே."

—திருமந்திரம்.

வேதம் உலகியலை விழைவார் பொருட்டும் சிவாகமம் வீடு பேற்றில் விழைவுடையார் பொருட்டும் செய்யப்பெற்ற தென்பர்.

" ஆரணநூல் பொதுசைவமருஞ் சிறப்பு நூலாம்
நீதியினுலுல கர்க்குஞ்சத் தினிபாத தர்க்கும்
நிகழ்த்தியது "

என்பர் அருணந்திசிவம்.

வேதம் மூன்று வருணத்தாருக்கும் சிவாகமம் நான்கு வருணத்தாருக்கும் உரியதென்பர் நீலகண்டசிவாச்சாரியார்.

சதாசிவமூர்த்தியினுடைய சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்னும் ஐந்து முகங்களி லிருந்து தோன்றியவை, காமிகமுதல் வாதுளமீருகக் கூறப் பட்ட சிவாகமங்கள் இருபத்தெட்டும். இவை மூலாகமங்கள் என்று கூறப்படும். இவற்றின் உபாகமங்கள் இருநூற் றேழாம். சிவாகமங்கள் சரியை முதலிய நான்கு பாதங்களாக வகுத்துக் கூறப்படும். மூலாகமம் இருபத்தெட்டில் மூன்ருவ தாக வுள்ளது சிந்தியாகமம். இது லட்சம் கிரந்தங்களை யுடையது.

ஈண்டுக் கூறிய சிந்தியாகமபதியிலக்கணம் என்பது சிந்தியாகமத்தின் ஞானபாதத்திற் கூறப்படும் பதியிலக்கண சாரமாய்ச் சுருக்கி யெழுதப்பட்டது சிந்தியாகமத்திற் கூறும் பதி பசு பாச லட்சணங்களைத் தமிழ்மொழியில் தெளிவுற விவரித்துக் கூறுவது இளங்காரிகுடி மெய்மொழித்தேவர் என்பவர் மூலமுமுரையுமாகச் செய்த மெய்மொழிச் சரிதை யென்னும் நூலாம். முப்பது செய்யுட்களாலாகிய சிந்தியாகமம் என்னும் பெயருடைய மற்ருெருதமிழ் நூல் ஞானசாத்திரங்கள் பலவற்றைத் தொகுத்தெழுதப்பெற்ற ஏட்டுச்சுவடியொன்றில் காணப்படுகின்றது. என்னிடமுள்ள ஏட்டுச்சுவடியொன்றில் சிந்தியாகம பதியிலக்கணம். பதி பசு பாச அட்டவணை, ஆத்மாமரணவியல், ஆத்மாசெனனவியல், ஞானம் உணர்த்தும் முறைமை என்னும் கட்டுரைகள் எழுதப்பெற் றுள்ளன. அவற்றுள் முதலாவதாகவுள்ள சிந்தியாகமபதி யிலக்கணக் கட்டுரையை ஏட்டில் உள்ளபடியே ஞானசம் பந்தத்தில் வெளியிடுகின்றேன்.

## பதியிலக்கணம்

அமைவாகிய அளவில்லாது விளங்கப்பட்ட பேரின்ப மாகிய சாயுச்சியக்கரையைச் சேரவேண்டில், ஆன்மாக்கள் அறிவாகிய ஞானமென்கிற தோணி யேறிப் பிறவிசாகரமாகிய சமுத்திரங் கடக்க வெண்ணும்பொழுதில், துவாதச சமயங்க ளாகிய பாருகளிலே தாக்குண்டு ஞானமாகிய தோணியுடை பட்டுப்போகாது சமய விகற்பவழிகளை நீக்கிக்கொண்டு

ஆத்மாக்கள் பேரின்பசாயுச்சியக் கரையை யடையும்பொருட்டு ஆத்மநாயகனுகிய சிவன் தனது திருவாய் மலர்ந்தருளிச் செய்த திவ்யாகமமிருபத்தெட்டிலே மூன்றுவதான ஆகமம் சிந்தியாகம மென்னும் பெயரினை யுடையது. இனி யிப்படித் தாகிய ஆகமப்பொருள் யாதென்னில், சிவன்சொல்லும் வழியாகிய சரியை கிரியையோகம் ஞானம்என்னும் நான்காம். இவற்றில் ஞானமாவது பதி பசு பாசமென்று சொல்லுந் திரி பதார்த்தங்களை யறியுமதுவேயாம். இனி பதியாவது சிவம். பாசமாவது மலமாயை காமியங்கள். இனி இந்த மூன்று பொருளிலும் பதியாகிய சிவத்தினுடைய பேதங்களும் சத்தியி னுடைய பேதங்களும் அவைகளின் வரலாறுஞ் சொல்லா நின்றது.

பதியானது சிவமென்றும் சதாசிவமென்றும் மயேசுர மென்றும் மூன்றுவிதமாக விளங்கியிருக்கும். இந்த மூன்றி லேயும் நினைப்புகளுக்கும் சுட்டுதலுக்கும் எட்டாமலிருந்து விளங்கப்பட்ட பரமசிவத்தின் தகைமை எப்படியெனின் சொல்லாநின்றது வேதாகமங்களிலே இப்படியிருக்குமென் றும் இப்படியல்லவென்றும் சொல்லப்பட்ட ஒப்புக்களின்றி அறிவுக்குள்ளே அறிவாய் விளங்கப்பட்டதாய், மாருத பேரின்பவெள்ளமாய், சதாகாலமுமொரு தன்மையினையுடைய தாய், நிராமயமாய், நிர்க்குணமாய், நின்மலமாய், நித்தியமாய், மாசில்லாததாய், பராபரமாய், சூக்குமரூபியாய், பாவனையில்லா ததாய், பழமையாய், அனுபோகானந்தமாய், சொல்லுமளவை யுமில்லாததாய், எங்குந் தானே விரவியிருப்பதாய், மாயாதீத மாய், தத்துவாதீதமாய், சைதன்னியமாய், சாந்தமாய், அனுதி மலமுத்தனுமாய், தேகாதி பிரபஞ்சங்களிலே மயங்கும் மயக்க மில்லாததாய், ஒருவடிவமில்லாததாய், ஒருபொருளாய், மலாதி கன்மங்களை யாத்மாக்களுக்குத் தனது திருவருளாலே நீக்கி யவ்வாத்மாக்களுக்குப் போக மோட்சங்களைக் கொடுப்பதாய், தானொரு முதலாய், சர்வ அண்டகடாகங்களை யெல்லாம் தாரிணமாயையையதிட்டித் துண்டுபண்ணிச் சராசரமாகிய வாத்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களை யவரவர் வினைக்குத் தக்கதாகக் கூட்டுவித்து நிற்கையாலே அண்டரூபி யென்றுசொல்லப்படுவதாய், நுணுக்க நுணுக்கமாயறியுமிடத்து அண்டகடாகங்களைக் கடந்து நிற்பதாய், ஆனந்தமேவடிவாய்

கற்கப்படாத கல்வியாய், காணப்படாத காட்சியாய், சொல் வேறு பொருள் வேருயிருந்தும் சொல்லினிடத்திலே பொருள் எப்படி விளங்குகிறதோ அப்படிப்போலே ஆத்மாவேறு தான் வேருக விருந்தும் சகலாத்மாக்கடோறும் பொருந்தி நிற்பதாய் முடிவில்லாத பேரின்பமாய், தானென்றிலே பற்றில்லாததாய் எங்கும் ஒழிவில்லாமல் நிறைந்த சர்வ பரிபூரணமாய், தான் சகலத்துக்கும் முதன்மையாய், சர்வாந்தரியாய், ஆதிமத்தியந்தமில்லாததாய், தானென்றைக்குத் தோன்றிற்று அன்றைக்கே ஆத்மாக்களை முத்தியிலே கூட்டுகைக்குப் பஞ்சகிருத்திய வியாபியாய், அன்றே பரைஆதி இச்சை ஞானம் கிரியை யென்கிற பஞ்சவிதங்களாகிய திருவருட் சத்தியையுடையதாய், அன்றே மாயா சத்தியையும்அதிட்டித்து நிற்பதாய். அறியுமிடத்துத் தனக்கொருவிகாரசலன மில்லாததாய், வரவு போக்குகளில்லாததாய், கனதையாய், முத்தாத்மாக்களினது வைப்பாகிய நிதியாய், அறிதற்கரிதாய், ஆகாசமாய், பவுத்திரமாய்' தனது சித்சக்தியுந்தானும் சகல ஆத்மாக்கடோறும் கலந்திருப்பதாலும் தனது நிலைமையினை யாத்மாக்களுக்குக் காட்டாததாய், மலபரிபாக காலங்களிலே காணப்பட்டதாய், தத்துவாதீதத்திலே விளையப்பட்ட சுகமாய் பேரின்ப வெள்ளமாய், வாசகஞானம் வாச்சியஞானம் வயிந்துவஞானம் பிரமஞானம் சங்கற்பஞானம் என்று சொல்லப்பட்ட இந்த ஐந்து ஞானமுங் கடந்திருப்பதாய், நினைப்புமறப்பிரண்டுமின்றி விளங்கப்பட்ட அனுபோக ஞானசாரியனாலே யறிந்து தனக்குத்தானே நுண்மையாயறிந்தனுபவிப்பதாய், இப்படியனுபவிப்பதென்று சொல்லவாராததாய், விளங்கிநிற்பதே பதியாகிய சிவமெனக்கண்டு கொள்க.

## திருவருணிலை

இனி இப்படித்தாகிய சிவமானது மாயையையதிட்டித்துத் தத்துவ விரிவும் சகவுற்பத்தியும் பண்ணிச் சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்கள் பண்ணவும் முத்தாத்மாக்களுக்கு முத்தி கொடுக்கவும் திருவுள்ளத்திலே நினைந்ததே திருவருட்சத்தியாகிச் சுபாவசத்தியாச்சுது. அந்தச் சுபாவசத்தியே பராசக்தி யென்றறிக. அந்தப் பராசத்தியிலே ஆயிரத்திலொரு கூறு ஆதிசத்தி யென்றறிக, இனியிந்த ஆதிசத்தியிலே ஆயிரத்திலொரு கூறு இச்சாசத்தி யென்றறிக. இனி யிந்த

இச்சாசத்தியிலே ஆயிரத்திலொரு கூறு ஞானசத்தியென் றறிக. இனி யிந்த ஞானசத்தியிலே ஆயிரத்திலொரு கூறு கிரியாசத்தி யென்றறிக. ஆகத்திருவருட்சத்திகளைந்துந் தோன்றியவாறு ஐந்துரூபமாயிருக்கும். இதற்குப் பிரமாணம் கொற்றங்குடியார் சிவப்பிரகாசம்.

நீடுபரா சத்தி நிகழிச்சா ஞானம்
நிறை கிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணை திருவுருவ மாகி
நவின்றபல கலைநாத விந்து வாதி
கூடுமொளி ளர்குடிலை மாயை மேவிக்
கொடு வினைகொடனு கரணபுவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்குமேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றியாமே. (14)

என்றும் வருவனவற்றுற் காண்க.

( தொடரும் )

---


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

## திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்

### ஜீரணோத்தாரண அஷ்டபந்தன

# மகா கும்பாபிஷேகம்

திருவையாறு ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ ஐயாறப்பருக்கும் விநாயகர் முதலிய பரிவாரங்கட்கும் சாதாரண ஆண்டு பங்குனித்திங்கள் 17 ஆம் நாள் ( 31—3—1971 ) புதன்கிழமை காலை மணி 8-45 க்குமேல் 10-30 க்குள் மகாகும்பாபிஷேகம் செய்துவைக்கத் திருவருளால் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கொண்டுள்ளார்கள்.

பொருளாதார நிலையை ஈடு செய்வதற்கும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தி வேதாகமக் கிரியைகள் செம்மையாகச் செய்வதற்கும் எல்லோரையும் இவ் அறப்பணியில் பங்குகொள்ளச் செய்வதற்கும் ஏற்றவகையில் டிக்கட் அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை திருப்பணிக்கும், மகாகும்பாபிஷேகத்திற்கும் பயன்படுகிறது.

| | |
|---|---|
| சுவாமிகோயில் திருவோலக்க மண்டப மேல்தளம் | ரூ. 100—00 |
| சுவாமிகோயில் உட்பிராகாரம் மேல்தளம் | ரூ. 50—00 |
| அம்மன்கோயில் மேல்தளம் | ரூ. 25—00 |
| சுவாமிகோயில் உட்பிராகார மண்டபம் | ரூ. 10—00 |

ரூ. 100 டிக்கட் வாங்குவோர் குடும்பத்துடன் 5 பேர்களும், ரூ 50 டிக்கட்டுக்கு 3 பேர் வீதமும், ரூ. 25 க்கு இருவர் வீதமும், மற்றவை ஒவ்வொருவர் வீதமும் அந்தந்த இடத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

எல்லோரும் இவ்வருட்பணியில் - அறப்பணியில் உளமுவந்து உதவிசெய்ய வேணுமாய் விரும்புகிறோம். திருப்பணி விரைவில் நிறைவுற்று மகாகும்பாபிஷேகம் இனிது நிறைவேற ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ ஐயாறப்பரைப் பிரார்த்திக்கிறோம்.

தொகையை அனுப்பி டிக்கெட் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி :-

காஷியர்,
ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானம்,
திருவையாறு P. O. தஞ்சைமாவட்டம்.

# செய்திகள்

## சைவசித்தாந்தக் கல்லூரிப் பரிசளிப்பு விழா

தருமையாதினம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களின் கனகாபிஷேக நினைவு சைவசித்தாந்தக் கல்லூரி சைவ சித்தாந்தப் பரிசளிப்பு விழா, 6--3--71 மாலை 3 மணிக்கு பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் துணைப்பேராசிரியர், திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திருவாளர், க. வெள்ளைவாரணனர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சித்தாந்தப் பேராசிரியர், மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் வரவேற்புரைக்குப் பின்னர், தலைவர் அவர்கள் மாணவர்களுக்கு சைவ சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறி, சைவ சித்தாந்த வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், முதல் மூன்று தகுதி பெற்ற மாணவர்களுக்கு, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளிய ரொக்கப்பரிசுகளையும் வழங்கினர்கள். நன்றியுரை கடவுள் வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

### தருமையாதினப் பல்கலைக் கல்லூரி

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழக ஆண்டு விழா

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் ஸ்ரீ குருஞான சம்பந்தர் மாணவர் கழகத்தின் 24 வது ஆண்டு நினைவு விழா 6--3...71 மாலை 3 மணிக்குத் தொடங்கி சிறப்புற நடந்தேறியது

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் துணைப்பேராசிரியர் திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர் வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனர் அவர்கள் தலைமை யேற்றார்கள். மற்றும் விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவும் ஒரு சேரக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். கவிதை, கட்டுரை பேச்சுப் போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்கட்கும், விளையாட்டுப் போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்கட்கும் விழாத்தலைவர் பரிசுகள் வழங்கினர். தலைவர் மாணவர்கட்குப் பயன்படும் வகையில் இலக்கிய நயமும், சாத்திர நுணுக்கமும் பொதுள

தலைமையுரை ஆற்றிச் சிறப்பித்தார். பின்னர் மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. தி. வ. காந்திமதி நாதன் அவர்கள் தலைமையில் திருக்குறள் பழமைப் பெட்டகமா? புதுமைப் பூங்காவா என்ற பொருளில் பட்டிமன்றம் ஒன்று நிகழ்வுற்றது. பழமைப் பெட்டகமே என திரு அ. கலியபெருமாள் எம். ஏ. திரு. க. இராமபத்திரன் பி. ஏ., திரு பழ. தியாகராசன் எம் ஏ. மூவரும்வாதிட்டனர். புதுமைப் பூங்காவே என திரு சு விசுவநாதன் எம். ஏ. திரு செல்வக் கணபதி, திரு கா. வெ. சுப்பிரமணியன் பி. எஸ்சி.(ஆனர்ஸ்) ஆகியோர் வாதிட்டனர். தலைவர் திருக்குறள் பழமைப் பெட்டகமே எனத்தீர்ப்பு வழங்கியபின் மன்றச்செயலர் திரு. சோலை. வெற்றிக்கண்ணன் நன்றிகூற நாட்டுவாழ்த்துடன் கூட்டம் நிறைவுற்றது.

## வேளூரில் தைச்செவ்வாய்த் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்) ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 31—1—71 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 9...2...71 செவ்வாய்க்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. 31...1...71 அன்று மயூரத்துவஜாரோகணமும் 4.. 2...71 அன்று காலையில் வெள்ளியிரதமும், இரவு சகோபுரத்தில் மயில்வாகனக் காட்சியும், 7...2...71 அன்று குதிரைவாகனக் கும் 8...2...71 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 9 2...71 அன்று ஸ்ரீசெல்வமுத்துக்குமாரசுவாமி சித்தாமிர்த தீர்த்தத்தில் தை கடைச்செவ்வாய்த் தீர்த்தங் கொடுத்தருளலும், இரவு துவஜாவரோகணமும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் விழாவினைத் தரிசித்து திருவருள் பெற்றனர்.

4...2...71, 5...2...71, 6...2 ..71 ஆகிய நாட்களில் தருமையாதீனக் கல்லூரிப்பேராசிரியர்களில் மகாவித்துவான், திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், வித்துவான். திரு. வி. சபேசன், வித்துவான். திரு வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோர் முறையே கந்தரலங்காரம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தரனுபூதி ஆகிய தலைப்புக்களில் சொற்பெருக்காற்றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

(சாதாரணஞு பங்குனிமீ 1உ முதல் 30உ முடிய)

( 15—3—71 முதல் 14—4—71 முடிய )

சாதாரண வருஷம் மாசி மாதம் 30-ம் தேதி (14—3—71) பானுவாரம் சித்ரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் சூரிய உதயாதி நாழிகை 32-27 க்கு கன்னியா லக்னத்தில் லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் கும்ப மாசத்திலிருந்து மீன ராசிக்குப் பிரவேசம் செய்கிருர். மேற்படி பிரவேச காலபலத்தால் உலகில் தன தான்யம் விருத்தியாகி சுபிக்ஷகரமாக இருந்து கொண்டு பிரஜைகள் சௌக்யமடைவார்கள்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலன்களைத்தரும். சஸ்யதான்ய விருத்திகளில் பலன்கள் சுமாராகவேதான் இருக்கும். விவகாரம் ஜெயிக்கும். நஷ்டதனம் வந்துசேரும், மேலோர் பெரியோர்களின் அன்பினுல் சகலமும் சாத்யமாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வெகு காலமாக எதிர்பார்த்து நடவாத காரியம் நடக்கும். வரவு செலவு சமமாகும். ஜீவனம் தொழில் சம்பந்தமாய் மாறுதல்கள் ஏற்படும் விரோதம் உண்டுபண்ணும். முடிவில் எல்லாம் நன்மையாகவே இருக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். கிரய விக்ரயத்தால் லாபம்

உண்டுபண்ணும், நஷ்டமான பொருள் வந்துசேரும். புதிதாக தொழில் ஏற்படச்செய்யும் மேலோர் பெரியோர்களின் பலமும், தெய்வபலமும் முன்னின்றுகாக்கும், வெள்ளி, சனி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத்தரும். கிரஹத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். பிராசீனதனம் தானுக வந்துசேரும். விவகாரம் ஜெயிக்கும். நினைத்த காரியங்கள் சித்தியாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$.

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். ஜீவனம் விருத்தியாகும் இல்லறம் ஓங்கும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் தானுக வந்துசேரும். எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். ஆரோக்யம் தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$.

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஒவ்வொரு காரியங்களும் மிகுந்த பிரயாசையுடன்தான் சித்தியைத்தரும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். தெய்வ சக்தி பிரகாசிக்கும். அசாத்யமெல்லாம் சுலப சாத்யமாகும். பிரதிஷ்டை முதலான புண்ணிய பலன்களால் தெய்வசக்தி முன்னின்று காக்கும். ஆரோக்யம் உண்டாகும். உலக பிரசித்தியும், கீர்த்தி பத்திரங்களும் கிடைக்கும். விசேஷ நன்மைகளைக் கொடுத்து வரவு, செலவு சமமாக இருக்கும்படி செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7, துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். வரவு, செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். அசாத்ய மெல்லாம் சுலபசாத்தியமாகும். ஜீவனம் ஓங்கும். புத்திராதிகளால் விசேஷ நன்மை உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தீராத வியாதி தீரும். ஸ்திர சுகஜீவனம் உண்டாகும். இடம் மாறு

தல் ஏற்படும். இல்லற சுகம் ஓங்கும். மேலோர் பெரியோர் களின் அன்பு கிடைக்கும். வித்யை விருத்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பத்தில் சுபமான காரியங்கள் நடைபெறும். புத்திராதி களால் குடும்பம் ஓங்கும். புதிதாக ஜீவனம் விருத்தியாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். புதிதாக வஸ்திரங்கள் ஆபரணங் கள் முதலியவைகள் கிடைக்கும். தெய்வசத்தி பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். உத்தி யோகத்தில் மேல்பதவி ஏற்படச்செய்யும். தான்யம் விருத்தி யாகும். மேலோர் பெரியோர்களால் நன்மையும் உலக பிரசித்தியும், குடும்ப விருத்தியும் இல்வற சுகமும் ஓங்கும். வெள்ளி. சனி சுபமாகும்

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தீராத வியாதி நிவர்த்தியாகும். ஆரோக்யம் தரும். கிரகசுகம் ஓங்கும். நஷ்டதனம் தானுகை வந்து சேரும் தெய்வபலம் முன்னின்று காக்கும். ஞாயிறு. திங்கள் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபபலனைத் தரும். ஸ்திரமான சுகஜீவனமும் மேல்பதவியும் கிடைக்கச்செய்யும். சத்ருக்கள் அவமானம் அடைவார்கள். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். புதிதான முறையில் ஜீவன லாபம் ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். தெய்வசத்தி ஓங்கும். சுபம் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

குறிப்பு :- ஜகத்ஜாதகபலன் ஸ்ரீ சூரியபகவான் மீனராசி பிரவேச காலத்தில் கன்னியா லக்னம் உதயமாகி நடப்பு வருஷத்திற்கு ராஜவான செவ்வாயும், மந்திரியுமான சந்திர னும் ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் அமைந்தும், லக்ன ராஜ்யாதிபதி புதன் சப்த மகேந்திரத்தில் நீசபங்கராஜ

யோகத்தை அடைந்தும் இருப்பதால் உலகில் பல மாறுதல் களுடன் அநேகவிதமான நன்மைகளும், பிராசீன தர்ம ரக்ஷணங்களும், ஆஸ்திக விருத்தியும், தெய்வ சத்தி பிரகாச மும் ஏற்பட்டு பிரஜைகள் சாந்தமான புத்தி உள்ளவர்களாய் இருந்துகொண்டு சுகத்தை அடைவார்கள். புதனுக்கு செவ் வாய் பார்வையும், சனி பகவானுக்கு வரப்போகும் விரோதி கிருது வருஷத்தில் ராஜாவாக இருக்கும் தன்மையும் அமைந் தும், சந்திரனுக்கு 8-ல் (மீனராசி பிரவேச காலத்தில்) நீச மாக இருந்துகொண்டு சஞ்சாரம் ஏற்படுவதாலும் உலகில் பலவிதமான இயற்கைக் கோளாறுகளாலும், துர்ஜனங் களாலும், அனேகவிதமான ஈதிபாதைகளையும், பயத்தையும் உண்டுபண்ணும், மேற்படி பங்குனி மாதம் 13 ஆம் தேதி சனிக்கிழமை அன்று சாந்திர மாதப்பிறப்புக்கு வருஷ ஆரம்ப மும், வசந்த நவராத்திரி ஆரம்பமும், ஏற்படுவதால் உலகில் ஆஸ்திக சஜ்ஜனங்கள் அடிக்கடி கிரஹங்களையும் ஸ்ரீபராசத்தி யையும் ஆராதித்துக்கொண்டு எப்பொழுதும் தெய்வசிந்தனை யாகவே இருந்துகொண்டுவர உலகில் பிரஜைகளுக்கு சமஸ்த மான மங்களமும் உண்டாகும்.

---

( 232 ஆம் பக்கத் தொடர்ச்சி )

## திருக்குவளையில் நெல் மகோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என் னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வண்டரும்பூங்குழலாள் சமேத ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி நெல் மகோற்சவம் 9—3—71 செவ்வாய்க்கிழமை முதல் 11—3—71 வியாழக்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. குண்டையூர்க்கிழார் பரவையார் மாளிகைக்கு நெல் முதலியன கொடுத்தலும், பின்னர் இறையருளால் கிழாருக்கு நெல் கிடைத்தலும், சுந்தரர் திருவாரூருக்கு நெல் மலையை எடுக்கப் பெருமானிடம் ஆள் வேண்டிப் பதிகம் பாட லும், பெருமான் பூதகணங்களால் நெல் மலையைத் திருவாரூ ருக்குக் கொணரச்செய்தல் முதலிய சுந்தரர் வரலாற்று நிகழ்ச் சிகள் இவ்விழாவில் சிறப்பிடம் பெறும். இவ்விழாவினை அன் பர்கள் பலர் கண்டு மகிழ்ந்தனர். இவ்விழாவை முன்னிட்டு அறிஞர்கள் பலர் சொற்பொழிவு ஆற்றினர்.

# STUDIES IN SAIVA SIDDHANTA

[ Part II ]

By Thiru J. M. Nallasvami Pillai, B.A., B.L.

(Continued from 10—2—71, Page 12)

37. By these means, Our Father scatters the darkness of *maya*, burns the strong *karma*, stamps down *mala* (Anava) and showers grace, and lovingly plunges the soul in the Ocean of Bliss. This is the nature of His Dance.

38. The *Silent* Jnanis, destroying the three kinds of *mala* establish themselves where their selves are destroyed. There they witness the Sacred Dance filled with Bliss. This is the Dance of the *Sabhanatha* whose very form is Grace.

39. The One who is past thought and speech assumes graciously the Form composed of the *Panchakshara* in the Dancing Hall of *Parasakti,* so as to be seen by His Consort, Uma, Haimavati. They never see births who see this mystic Dance."

40. O my gracious Guru ! Thou hast explained to me beautifully the nature of the *Nadanta* Dance. Let me now know the nature of the Panchakshara. Can they be one with the letters which are perishable ?

41. "The Symbols of these letters may be perishable but not their connotation in any language The meanings of the five letters respectively are God, His grace (Sakti), Soul Trodana and Mala

42. God, Grace, Soul, Trōdana and Mala are the purport of the five letters (Sivayanama). If pronounced beginning with *na*, you will not obtain Grace. You will obtain It when you pronounce It begining with *Si*.

43. If this beautiful *Panchakshara* is meditated upon, the soul, getting rid of its *Anavamala* will land in the Region where there is neither light nor darkness, and there, God's Grace (Sakti), will unite it to Sivam.

44. If the *Panchakshara* is pronounced with the letters denoting the two *malas*, then will he not get rid of his three *malas*, and obtain Bliss. If pronounced otherwise according to law, your *jnana* will be boundless and you can live in Bliss.

45. In the *Panchakshara*, are found the Agamas and the Vedas, given out by the gracious God. In it, are found the *Puranas*. In it, is the Blissful Dance. And in it, is found the silent Mukti, which passes beyond all.

46. The Agamas declare that the nature of the union secured by the Muktas is like that of the fruit and its taste, fire and its heat, the musical composition and its tune.

47. The Vedas with truth declare that as the various Tattvas are found united inseparably in the bound condition, so the souls in the freed condition will dwell as one with God.

48. As the moon's light is indistinguishable in the Light of the Sun, so will the soul unite itself to the foot of the Supreme Lord and plunge itself in Bliss.

49. If it be said that the soul had to go and unite itself to God, then the Omnipresence of Siva will be destroyed. If God is said to have united Himself to the soul, then they must be different. But what then is the Truth ? The position is like that of the Sun which surrounds the man who had lost his blindness. "

50. Thou tellest me that the Supreme one, who is past thought and speech, is gracious and suffers no taint, and that like this *Pati*, the Pasu and *Pasa* are also eternal. Prove this in *Mukti*

51. "O my Son, Hear how they are in *Mukti* ! He who enjoys the Supreme Bliss is the soul. He who imparts this Supreme Bliss is the First Couse. That which increases this happiness is MALA. Understand this in all love."

52. "O my Father, let me know the unfailing means of securing this Mukti ?" "Hear me state this ! They who regard and worship the *Guru Linga*, GOD'S DEVOTEES as the incomparable, God, will not suffer births and deathes."

53. "Melting in Love, as the cow that had calved recently, the Jivan-muktas will take strong hold of the *Guru*, *Lingı* and *Bhaktas*, and will be possessed of great love to them, which will destroy their sins."

54. வாழ்ந்தேன் அருட்கடலே வற்ருப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமல் மேதினியில் — சூழ்ந்துவிடா
வெண்ணைச் சுவேதவன மெய்கண்ட நாதனே
யுண்மைத் தவப்பயனேயுற்று.

O, Meykanda-Natha, the fruit of True Penance, Who dwellest in Tiruvenneynallur Svetavana O. Ocean of Grace, I have been saved by thee, saved from being tossed about in the Ocean of Sorrow.

# THE TATTVAS AND BEYOND

"God is not this not this" —Brihad Ar. Up.

"Other than the known is God, other than the unknown too" —Swetas Up.

We present our readers to-day a table of the 36 tattvas derived from Maya, together with the other postulates of the Siddhanta school, with which they are connected in *advaita* relation. In Tamil, small tracts called *kattalai* (கட்டளை) exist, which describe and define these tattvas. These tattvas are variously enumerated as 19 or 25 or 36 or 96. Both Siddhantins and Vedantins (Idealists) accept the number 36 or 96, but they differ in several particulars. 'Thirty-six' when when still more analysed give 'Ninety-six'. The more simpler form of the table is herein given, and this requires to be carefully studied. A careful and precise definition of these tattvas has to follow, but we do not attempt it here for want of space. Rev. Hoisington has translated one of these tracts, as also Rev. Foulkes of Salem. Both these books unfortunately are out of print. We will proceed to explain the table briefly, stating at the same time its points of difference from other Schools. We have to premise first, that the tattvas which are enumerated here are all produced out of and from sub-divisions only of *Maya* and the term as such does not cover either Anava, or Karman or Atman or God. These tattvas form as it were different coats or vestures, of different texture at different times and at different stages, to the soul undergoing evolution with intent to rid itself of its coil (Anava) in strict accordance with the Law of Karma.